# இந்திய ஜனதிபதி கிரி இன்று வருகிறார்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 329
தேசிய தினசரி


யாழ்ப்பாணம் மார்கழி 24 ஷவ்வால் 29 வியாழக்கிழமை [8-1-70]

பொங்கல் திருநாளை
பொலிவுடன் கொண்டாட
விசேஷமாக வரவழைக்கப்பெற்ற
சிறிதும் கலப்பற்ற
சுத்தமான
**சர்க்கரை**
மொத்தமாகவும் - சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
ஆ. வைத்திலிங்கம் & கோ
45, கே கே.எஸ்.ரோட் — யாழ்ப்பாணம்.
போன்: 663

## நாளை கண்டியில் வரவேற்பு

கோட்டை, வியாழன்

பாரத ஜனதிபதி திரு. வி. வி. கிரி இன்று காலை 10-30 மணிக்கு விசேஷ விமானத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைவார். விமான நிலையத்தில் இவரை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



திரு. கிரியுடன் அவரது பாரியாரும், புதல்வர் சங்கர் கிரியும் விமானத்தில் வருவார்கள். இவர்களுடன் தகவல் ஒலிபரப்பு மந்திரி திரு. ஐ. கே. குஜரால் தம்பதிகளும் வருவார்கள். கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இலங்கை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா அவரை வரவேற்பார்.

கொழும்புநகர் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. திரு கிரிக்கு விமரிசையான அன்பான வரவேற்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

நாளை கண்டிக்குச் செல்லும் ஜனதிபதிக்கு அங்கு பெரும் வரவேற்பளிக்கப்படும். தலதா மாளிகையில் புனித தந்தம் தரிசனம் கிடைக்கும்.

## சந்திர மண்ணில் தங்கமும், வெள்ளியும்

ஹூஸ்டன், ஜன. 7

அப்பல்லோ வீரர்களால் பூமிக்குக் கொண்டுவரப்பட்ட சந்திரமண்ணில் புதிய கனிப்பொருட்கள் இருப்பதாக ஹூஸ்டன் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் தெரிவித்தது.

தங்கமும் வெள்ளியும் குறைவாகக் காணப்படுகின்றன என்றும் பெயரிடப்படாத வேறுபல கனிப்பொருட்கள் இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ‘தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளிடையே வேறுபாடு இல்லை’

### தேர்தலுக்குப்பின் ஏற்பட்ட நிலைபற்றி திரு. நவரத்தினம் எம். பி.

ஊரதீவு, புதன்

“கடந்த தேர்தலில் தமிழர்களின் இருபெரும் கட்சிகளுக்கிடையில் இருவேறுபாடுகள் இருந்தது. ஒற்றையாட்சியின்கீழ், சிங்களவர்களின் ஒத்துழைப்புடனேயே தமிழர்களின் உரிமைகளைப் பெறலாம் எனத் தமிழ்க் காங்கிரஸ் கூறியது சமஷ்டி ஆட்சிமுறையில்தான். தமிழினம் உரிமைபெற்றுவாழ முடியுமென்றும் எந்தச் சிங்களக் கட்சியுடனும் சேர்ந்து பதவி பெருது தொடர்ந்து போராடுவதென்றும், தமிழரசுக்கட்சி கூறியது. தேர்தல் முடிந்ததும் இருகட்சிகளும் அரசாங்கத்துடன் சேர்ந்து ஒரே கொள்கையை ஆதரிக்க தொடங்கிவிட்டன. இதனுல் இவ்விரு கட்சிகளுக்குமிடையிலிருந்த வேறுபாடுகள் இல்லாமல்போய்விட்டன.”

திரு. எஸ். பாலேந்திரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது: இருகட்சிகளும், தேசிய ஆட்சியில் இருந்து தமிழினத்தின் உரிமைகள் எதனையும் பெற்றுத்தரவில்லை. கடந்த 4 வருடங்களில் தமிழர்கள் ஒன்றன்பின் ஒன்றாக உரிமைகளை இழந்துவந்துள்ளனர். தமிழர்களுக்கு பாதகமான சட்டங்கள் இவ்விரு கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

உரிமைகள் ஒவ்வொன்ருக பறிபோகும்போது பார்த்துக்கொண்டிருந்துவிட்டு இன்று அரசாங்கத்தை எதிர்த்து போர்க்குரல் எழுப்புவதில் பயனில்லை.

1949-ம் [illegible] மாகாணம் [illegible] காடாக இருந்தது. கல்லோ [illegible] திட்டத்தின்பின் சிங்[illegible]லாம் தெரிந்துகொண்டு, இருகட்சிகளும் காங்கேசன்துறையில் பிரதமருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டன.

காங்கேசன்துறைத்தொகுதியில் சிங்களப் பாடசாலைகள் நிறுவப்பட்டுவருகின்றன. இன்னும் பத்து ஆண்டுகளில் காங்கேசன்துறை துறைமுகம் தேசிய மயமாக்கப்படலாம். 25 ஆண்டுகளுக்கு இதே ஆட்சிமுறை இருக்குமானுல் தமிழர்களின் நிலை மோசமாகிவிடும்.

சிங்களவரும், தமிழரும், பரந்துவாழும் திட்டத்தை உருவாக்குவதே சிங்களக் கட்சிகளின் எண்ணமாகும், 58-ம் ஆண்டு கலவரத்தின் போது தமிழருக்கு ஒரு பிரதேசம் இருந்தபடியால் யாழ்ப்பாணத்தில் [illegible]க் கூடியநிலை இருந்தது. தமிழ் மக்கள் இவற்றை உணரவேண்டும்.

அம்பாந்தோட்டை மக்கள் அவதி

## “கிடுகு வைத்திருப்பவர்கள் தொடர்புகொள்ளுங்கள்”

### அரசாங்கம் வேண்டுகோள்

கோட்டை, புதன்

கிடுகுகள் வைத்திருப்பவர்கள் இலவசமாகவோ அல்லது பணத்துக்காகவோ கொடுக்க விரும்புபர்கள் உடனடியாக அம்பாந்தோட்டை அரசாங்க அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு அரசாங்கம் இன்று அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்தது.

அம்பாந்தோட்டைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருப்பிட வசதிசெய்து கொடுப்பதற்காகவே 2 லட்சம் கிடுகுகள் தேவைப்படுவதாக அம்பாந்தோட்டை அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் ஒற்றுமைப் பேச்சு எதற்கு என்கிறார் எம். பி.

கொடிகாமம், புதன்

தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமைப்படவேண்டும் என்ற குரல் நாலா பக்கங்களிலிருந்தும் எழுந்துள்ளது. 1956ம் ஆண்டுத் தேர்தலுக்கு பின்னர் தமிழ் தலைவர்கள் ஒற்றுமைப்பட்டார்கள் என் [illegible]ழரசு வாலிபமுன்னணி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

[illegible]ரு நவரத்தினம் மேலும் கூறியதாவது:

யாழ். மாநகரசபை

## இந்திய ஜனதிபதிக்கு இரு மொழிகளில் வரவேற்பு

யாழ்ப்பாணம், வியாழன்

இந்திய ஜனதிபதி திரு. வி. வி. கிரிக்கு இம்மாதம் 11ந் தேதி யாழ்ப்பாண மாநகர சபை பொதுவரவேற்பளிக்கும். இப்பொது வரவேற்பில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வரவேற்புப் பத்திரம் வழங்கப்படும். மேயர் திரு. எஸ். நாகராசா வரவேற்புப் பத்திரத்தைக் கையளிப்பார். சித்திரவேலைப்பாடு அமைந்த வெள்ளிப்பேழையில் வைத்து இவ்வரவேற்புப்பத்திரம் வழங்கப்படும்.

இலங்கை, இந்தியநாட்டு [illegible]

யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சிறப்பாக அலங்கரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய ஜனதிபதி நகர மண்டப வாசலில் இருந்து மேளவாத்தியத்துடன் அழைத்துச் செல்லப்படுவார். பாடசாலை பாண்ட் வாத்தியக் கோஷ்டியினரும் வாத்திக் கோஷ்டியினரும் அதில் பங்குபற்றுவார்கள்.

கிளிநொச்சி, சாவகச்சேரி, பருத்தித்துறை, உடுப்பிட்டி மற்றும் தொகுதிகளிலிருந்தும் பாடசாலை மாணவர்கள் மோட்டார் வான்களில் [illegible]

## தேங்கிக் கிடக்கும் சின்னவெங்காயம்

மண்டைதீவு, புதன்

தேங்கியிருக்கும் வெங்காயத்தை வடமாகாணத்திற்கு வெளியில் கொண்டு சென்று விற்பனை செய்ய இடைக்கால அனுமதி கொடுக்குமாறு கோரும் மகஜர் ஒன்றை வேலணை, சரவணை பலநோக்கக்கூட்டுறவுச்சங்க நிர்வாகிகள் ஊர்காவற்றுறை எம். பி திரு. வ. நவரத்தினத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக நடவடி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் நாலா பக்கங்களிலிரு
ந்தும் எழுந்துள்ளது. 1956ம் ஆண்டுத் தேர்தலுக்கு பின்னர் தமிழ் தலைவர்கள் ஒற்றுமைப்பட்டார்கள் என்பதை பலர் மறந்து விட்டார்கள். தமிழ் தலைவர்களான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு. சி. சுந்தரலிங்கம் ஆகியோர் ஒற்றுமைப்பட்டு சட்ட மறுப்பு இயக்கம் நடத்த வேண்டுமென முடிவு எடுத்தார்கள். கார்களுக்கு தமிழ் இலக்கம் பொறித்துசட்டத்தை மீறவேண்டும் என்று எடுத்த முடிவை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் இடையில் மாற்றிக் கொண்டதால் ஒற்றுமை குலைந்தது.

கொடிகாமம் சந்தையில் நேற்றிரவு நடந்த தமி...

வி. என். நவரத்தினம் பேசும்போது மேற் கண்டவாறு கூறினார்.

திரு நவரத்தினம் மேலும் கூறியதாவது:

சட்டமறுப்பு செய்ய வேண்டுமென தமிழ் பிரமுகர்கள் மகாநாட்டில் ஒப்புக் கொண்ட தமிழ்க் காங்கிரஸ் தலைவர் சட்ட மறுப்பு செய்ய மறுத்துவிட்டார். 1957ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் திகதி யாழ்ப்பாணம் முற்ற வெளிக்கு சுமார் 2000 கார்கள் வந்து சேர்ந்தன. இவற்றுள் 500 கார்கள் தெரிவு செய்யப்பட்டு திரு. செல்வநாயகம், தலைமையிலும், திரு. பொன்னம்பலம் தலைமையிலும் தமிழ் இலக்கம் பொறித்து செல்வதென முடிவுசெய்யப்

4-ம் பக்கம் பார்க்க

தொடங்கிவிட்டன. இதனால் இவ்விரு கட்சிகளுக்குமிடையிலிருந்த வேறுபாடுகள் இல்லாமல்போய்விட்டன.''

தொண்டமானாற்றில், தமிழர் சுயாட்சி கழகத்தின் கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப்பேசிய திரு வி நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

...யனில்லை.

1949-ம் ஆண்டு கிழக்கு மாகாணம் கூடியளவு காடாக இருந்தது. கல்லோய திட்டத்தின்பின் சிங்களமக்கள் அங்கு குடியேறினார்கள். கிழக்கில் மூன்று சிங்கள தொகுதிகளை உருவாக்க அரசாங்கம் முயற்சி செய்துவருகிறது. இதெல்

தேசம் இருந்தபடியால் தான்; யாழ்ப்பாணத்தில் தஞ்சம்புகக் கூடியநிலை இருந்தது. தமிழ் மக்கள் இவற்றை உணரவேண்டும்.

திருவாளர்கள் சி. நடராசா, மு. தர்மரத்தினம், பொ. புவனேந்திரன் வ. விசாகலிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

பார். சித்திரவேலைப்பாடு அமைந்த வெள்ளிப்பேழையில் வைத்து இவ்வரவேற்புப்பத்திரம் வழங்கப்படும்.

இலங்கை, இந்தியநாட்டு தேசிய கீதங்களையும் பாடசாலை மாணவர்கள் பாடுவார்கள். மாநகரசபைக் கொடியுடன் இலங்கை, இந்தியத் தேசியக்கொடிகளும் பறக்கவிடப்படும்.

கிளிநொச்சி, சாவகச்சேரி, பருத்தித்துறை, உடுப்பிட்டி மற்றும் தொகுதிகளிலிருந்தும் பாடசாலை மாணவர்கள் மோட்டார் வான்களில் அன்றைய தினம் யாழ்ப்பாணம் வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது.

வேலணை, சரவணை பலநோக்கக்கூட்டுறவுச்சங்க நிர்வாகிகள் ஊர்காவற்றுறை எம். பி திரு. வ. நவரத்தினத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமுகமாக திரு. நவரத்தினம் அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

# இலங்கையில் காந்திகிராமத்துக்கு 1 கோடி 90 லட்சம் உதவி

## வெளிநாட்டு ஸ்தாபனம் வழங்கும்

மாவிட்டபுரம், புதன்

இலங்கையில் காந்தி கிராமம் அமைக்க ஒரு கோடியே 90 லட்சம் ரூபாவை வெளிநாட்டு ஸ்தாபனம் ஒன்று வழங்கவிருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ் பீட்டர்ஸ் தலைமையிலுள்ள யாழ் காந்தி நூற்றுண்டு விழாக் கமிட்டி 12 காரியாதிகாரி பிரிவிலும் 12 கிராமங்களைத் தெரிந்து அக் கிராமங்களை காந்தி கிராமமாக அமைப்பதென முடிவு செய்யப்பட்டு இருந்தது.

வெளிநாட்டு ஸ்தாபனப் பணத்தில் செலவிடப்பட்டு காந்திகிராம அமைப்புவேலைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கின்றது அவ்வப் பகுதி காரியாதிகாரிகளும் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களும் இந்த அமைப்பு வேலைகளை ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

இப்பணத்தில் ஒவ்வொரு மாதிரி கிராமத்திலும் ஆஸ்பத்திரி. பாடசாலை நெசவு நிலையம் விளையாட்டரங்கு கைத்தொழில் நிலையம் ஐக்கிய பண்டகசாலை ஆதியன அமைக்கப்படுவதுடன் சிரமதானச் செலவுகளுக்கும் பயன்படுத்தப்படும்.

அடுத்த மாதம் முதல் சர்வதேச சிரமதான இயக்கத்தினரால் சிரமதானமூலம் இக் கிராமங்கள் அமைப்பு வேலைகள் நிகழவிருக்கின்றன. இத்துடன் யாழ்மாவட்டத்திலுள்ளபல இயக்கங்களினதும் கிராம அபிவிருத்தி, சனசமூக நிலயங்களினதும் பிரதிநிதிகள் சிரமதானமூலம் இக் கிராமங்களை அமைக்கவிருக்கின்றனர்.

காந்தியின் கொள்கைகளை கடைப்பிடிக்கும் கிராமமாக அமைக்கப்படும் இக் கிராமங்களில் காந்தியின் கொள்கைகள் பிரதிபலிப்பதுடன் பின்தங்கிய மககளின் முன்னேற்ற நிலயங்களாகவும் அமையவிருககிறது.

# ரஷ்யாவின் சமாதானமுயற்சிக்கு யாழ். நகர மேயர் பாராட்டு

## யாழ். நகரில் சோவியத் கலாசாரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், வியா.

'உலகம் இன்னொரு மகா யுத்தத்தை எதிர்நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இவ்வேளையில் சமாதான சகவாழ்விற்கு சோவியத் யூனியன் அரும்பாடுபட்டுவ வதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.'

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலயத்தில் நேற்றுக் காலை சோவியத் கலாச்சார கண்காட்சியை ஆரம்பித்து வைத்த யாழ்ப்பாணம் மேயர் திரு. எஸ். நாகராசா மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய சோவியத் மக்கள் குடியரசின் ஆதரவில் நடைபெற்ற இக்கண்காட்சியில் மேயர் திரு. நாகராசா மேலும் கூறியதாவது:-

இலங்கையிலுள்ள ஏனைய மக்களைப்போல் யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களும் சோவியத் யூனியனின் உலகரீதியான சமாதான முயற்சியைப் பாராட்டுகின்றோம். நாட்டின் இதர பகுதிகளிலுள்ளவர்களைப் போல் யாழ்ப்பாண மக்களும் சோவியத் மக்களுடன் நேச உறவு பூண்டு வாழ விரும்புகின்றோம். இலங்கைக்கும் சோவியத் யூனியனுக்குமிடையிலுள்ள நல்லுறவுமென்மேலும் வலுப்பெற வேண்டுமென்பதே நமது விருப்பம் இருநாடுகளுக்குமிடையிலுள்ள கலாச்சார தொடர்புகள் நன்கு வலுப்பெற்றுத் தொடர்ந்திருக்க வேண்டுமென்றும் விரும்புகின்றோம். இவ்வரிய கண்காட்சியை யாழ்ப்பாண மக்கள் பார்க்க வசதிசெய்து கொடுத்தவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரஷ்யஸ்தானிகராலயத்தை சேர்ந்த டாக்டர் வினிக் பேசும் போது கூறியதாவது:

சோவியத் யூனியன் பல நாடுகளுக்கு பொருளாதார கல்வி, கலாச்சார வழிகளில் பல உதவிகளை செய்துவருகிறது. பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகின்றது. பின்தங்கிய நாடுகளில் பல இன்று முன்னனியில் நிற்பதற்கு சோவியத் யூனியனின் உதவிதான் பெரிதும் காரணம். எல்லா நாடுகளுடனும் நேசக்கரம் நீட்டி சமாதானமாக வாழவே விரும்புகிறது. சோவியத் மக்கள் இலங்கை மக்களுடன் அன்பாகவும் சமாதானமாகவும் வாழ விரும்புகின்றார்கள்.

கலாச்சார கண்காட்சி 9-ம் திகதி வரை யாழ்ப்பாணம் பொதுநூல் நிலய மேல்மாடியில் நடைபெறும். யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் சோவியத் திரைப் படக்காட்சி இன்றும், நாளையும் நடைபெறுகிறது.

# சிங்கப்பூருக்கு வியட்நாமிலிருந்து பீரங்கிக் கப்பல்கள்

## அமெரிக்க உபஜனாதிபதிக்கு பாதுகாப்பு

வாஷிங்டன் ஜன. 7

அமெரிக்க உப ஜனாதிபதி சிங்கப்பூருக்கு விஜயம் செய்யவிருப்பதை முன்னிட்டு சிங்கப்பூருக்கு வியட்னாமிலிருந்து ஹெலிகொப்டர் விமானங்களும் பீரங்கிக் கப்பல்களும் அனுப்பப்பட்டுள்ளன. கோலாலம்பூரில் பல்லாயிரக் கணக்கான பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இங்கு விஜயம் செய்யவிருக்கும் உப ஜனாதிபதி பல அரசியல் கட்சிகளின் எதிரியாக கண்டனத்துக்குரியவராக இருப்பதாலேயே இவ்வித பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கோலாலம்பூரில் உள்ள சிங்கப்பூர் பிரதமர் திரு துங்கு அப்துல் ரஹ்மானின் வாசஸ்தலத்தைச் சோதனை செய்யப் புகுந்த சிலரை சிங்கப்பூர் பொலிசார்வெளியேற்றினர்-உப ஜனாதிபதி விஜயத்தின் ஆரம்ப நடவடிக்கையாக அமெரிக்க இரகசியப் பொலிசார் இவ்விதம் நடந்துள்ளதாகக் கூறப்பட்டது.

# 'இலக்கியத் துறையில் ஈழம் முன்னேறுகிறது'

யாழ்ப்பாணம், வியாழன்

''இலக்கியப்படைப்புக்களில் முன் நிற்கும் ஈழம் பத்திரிகைத்துறையிலும் முன்னணியில் திகழக்கூடிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. பத்திரிகைத்துறையில் இலக்கிய ஏடுகள் ஒருபுத்துணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்படுகின்றன.''

இவ்வாறு ''வைகறை'' இலக்கிய சஞ்சிகை வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகித்துப்பேசிய புலவர் ம. பார்வதிநாதசிவம் கூறினார்.

விஜேஜேந்திரன்- நிமலன் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள இச்சஞ்சிகையின் முதல் வெளியீட்டுவிழாவில் 5 வயது சிறுவன் முதற்பிரதியைப்பெற்றார்.

புலவர். ம. பார்வதிநாதசிவம் தொடர்ந்துபேசுகையில் கவிதை சிறுகதை, நாவல் போன்ற இலக்கியப்படைப்புகளில் முன்னிற்கும் ஈழம் பத்திரிகைத்துறையிலும் இலக்கிய இதழ் வெளியீட்டுத்துறையிலும் முன்னிற்கின்றது. வைகறை என்னும் முத்திங்கள் இதழ்இலக்கிய கலைத்துறையில் நல்ல சேவையாற்றுமென்பதில் ஐயமில்லை என்றார்.

திரு. புதுமைலோலன் பேசுகையில் வைகறை என்னும் இவ்விதழ் நல்ல தரமான படைப்புக்களைக் கொண்டு விளங்குகிறது. முதல் இதழைப்போலவே இனிவரும் இதழ்களும் தரம் உடையவையாக அமைதல் வேண்டும் என்றார்.

இரசிகமணி. கனக. செந்திநாதன் பேசுகையில்சுமார் 10 வருடகாலத்தில் ஈழத்தில் சிறுகதைகளாக, நாவல்களாக, கவிதைகளாக, நாடகங்களாக இன்னும் பிறநூல்களாக 350 நல்ல நூல்கள் வெளியாகியுள்ளன. அவற்றில் இலக்கிய நூல்கள் 25க்குள் இருக்கலாம் இந்த நிலைக்கு காரணம் சாதாரண ஆக்க இலக்கியக்காரர் இலக்கிய கட்டுரைப்பக்கம் திரும்பிப் பார்ப்பதில்லை. இத்துடன் இந் நூல்களை ஒரு பகுதியினரே வாங்குவதால் இலக்கியம் ஆக்குபவர்கள் சோர்ந்து விடுகிறார்கள். எனவே சகல மக்களும் இந்நூல்களை வாங்கிபடித்தால் தான் ஆக்க இலக்கியகாரர்களிடமிருந்து நல்லதரமான நூல்களை எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும் என்றுகூறினார். மா. வி. நி

## குடும்பத்திட்ட கருத்தரங்கு

புத்தூர், புதன்

குடும்பத் திட்டக் கல்வி பற்றிய கருத்தரங்கு ஒன்று கோப்பாயில் இம்மாதம் 9-ம் திகதி தொடக்கம் 17-ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் குடும்பத்திட்டம் பற்றிய உரையாடல்களும் தமிழில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணம் உதவி சௌக்கிய சேவைகள் சுப்பிரின்டன், கோப்பாய் வைத்திய அதிகாரி, யாழ்ப்பாணம் சௌக்கிய கல்வியாளர் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

வெள்ளத்தால்

# பாதிக்கப்பட்ட மாணவருக்கு இலவச பாடபுத்தகங்கள்

கோட்டை, புதன்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்களை வழங்குவதற்கு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

பௌத்த மாணவர்களுக்கு மட்டுமன்றி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சகல மாணவர்களுக்கும் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுமென பௌத்த காங்கிரசைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். இவ்விதம் மாணவருக்கு புத்தகம் வழங்க சிபார்சு செய்யும் கல்லூரி அதிபர்கள் கொழும்பு 7ல் உள்ள பௌத்தகாங்கிரஸ் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளளர்

வெள்ள நிவாரணத்துக்கு மக்கள் ஆதரவு தாராளமாகக் கிடைத்துள்ளதென செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்தனர். இதுவரை 7000 ரூபாவுக்குமேல் உதவி கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# கலைகலாசாரத்துக்கு நம்மவரின் தொண்டு

## யாழ். மேயர் புகழுரை

யாழ்ப்பாணம், வியா

'ஈழத்தில்கலை, கலாச்சார வளர்ச்சிக்கு நம்மவர்செய்து வரும் தொண்டு அளப்பரிது பிறநாட்டுக் கவிஞர்கள் வடுகை பல வகையிலும் தடைப்பட்டுள்ள இந்நாட்களில் நம்மிடையே தரமான கலைஞர்கள் தோன்றி ரசிகர்களை திருப்திப்படுத்த வேண்டியதுஅத்தியாவசியமாகின்றது'

இவ்வாறு பாஷையூர் மக்கள் முன்னேற்ற சங்க சனசமூக நிலய ஆதரவில் நடைபெற்றசெல்வன் பா. பிலேந்திரனின் ருதங்க அரங்கேற்று வைபவத்தில்பிரதம விருந்தினராகக் கலந்துரையாற்றிய யாழ் மேயர் திரு சி நாகராசா கூறினார்.

மருதனமடம் இராமநாதன் இசைக்கல்லூரி முதல்வர் இசை மன்னர் சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்:- கலைத்துறைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இந்த பாரம்பரிய பெருமை பாதுகாக்கப்பட வேண்டும். குரு சிஷ்ய பரம்பரை மூலம் வளர்ந்து வந்துள்ள மிருதங்க கலையை ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வளர்ப்பதற்கு பலநந்திகேஸ்வரர்கள் எம்மிடையேயுள்ளார்கள்' என்றார்,

திரு. சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளை பேசுகையில்:- தொன்றுதொட்டு இசை அரங்குகளில் மிருதங்கம் முக்கியமான பக்க வாத்தியமாக கொண்டு சங்கீதக் கச்சேரிகள் நடக்கின்றன. மிருதங்க வாத்தியம் இல்லாதுபாட்டுக்கச்சேரி சோபிக்ககது.

மிருதங்க பயிற்சி யாழ்ப்பாணத்தில் குரு சிஷ்யபரம்பரை மூலம் வளர்ச்சியடைந்து வருவதை கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதே போல் ஏனைய வாத்திய பயிற்சிகளும் குரு-சிஷ்ய பரம்பரை மூலம் வளர்ச்சிய

(4-ம் பக்கம் பார்க்க—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## தேவை

பண வசூலாளர்:

யாழ். நகரில் பிரபல ஸ்தாபனத்திற்கு பண வசூலாளர்கள் தேவை. ரொக்கப் பிணை செலுத்தக்கூடிய ஜீ. சீ. ஈ. தராதரமுள்ளவர்கள் மட்டும் எழுத்து மூலம் 14-1-70க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1633, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1633

தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகளும், நெல்லி இரசம் விற்பனை செய்வதற்கு பெண்களும், சைக்கிள் வியாபாரத்திற்கு ஆண்களும் தேவை. நேரில் வரவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 1757

## டியூஷன் [Tution]

J. S. C. வரை கணிதம், ஆங்கிலம், பொது விஞ்ஞானம் ஆகிய பாடங்களும் S. S. C. வரை தூய, பிரயோக கணிதங்களும் கொடுக்கப்படும். 229, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்: 1632

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 8—1—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 கர்னாடகஇசை, 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-10 மெல்லிசை, 6-15 இசைப்பயிற்சி,

## வேலணை கிராமச்சபை கேள்வி அறிவித்தல்

வேலை விபரம்:- பறையன் தோட்டம் ஒழுங்கை வேலணைக் கிராமச்சபைத் தலைவரால் மேற்குறிப்பிட்ட வேலை செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் 1970-ம் ஆண்டு தை மாதம் 19-ந் திகதி காலை 10-30 மணி வரையும் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 18-1-70-ம் திகதி நண்பகல் 12 மணி வரையும் கேள்விப் பணம் ரூபா 50/- பத்திரப் பணம் ரூபா 5/- கட்டியதன் பேரில் உத்தியோகபூர்வமான பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரருக்கு வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கிராமச் சபைக் காரியாலயத்திலும் வடபகுதி உதவி உள்ளூராட்சி அதிபரின் காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

இப்படிக்கு
நன்றியுள்ள
ஒப்பம்:
க. சதாசிவம்,
தலைவர்,
கிராமச் சபை,
வேலணை.

1906

## தீர்ப்பு ஒத்திவைப்பு

வல்வெட்டிததுறை, புதன்

வல்வெட்டித்துறை தீருவிலைச் சேர்ந்த தங்கள் கதிரன் என்பவர் கடந்த வருடம் ஆடி மாதம் 13ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த வேலும் மயிலுவின் மகள் தேவமனோகரி என்னும் 13 வயதுச் சிறுமியின் 380 ரூபாபெறுமதியான சங்கிலியை அபகரித்ததாக வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு இம் மாதம் 13ந் திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதை ஒத்திவைத்தார்,

## விளையாட்டரங்கு

மாவிட்டபுரம், புதன்

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 24-ம் திகதி 8-1-70]

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** இதயத்தில் மகிழ்ச்சி பொங்கும். எடுத்த காரியத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள். தொழில் துறையிலும் அனுகூலம் காணப்படுகின்றது. கடற்றொழிலாளர்களுக்கு வருமானம் அதிகரிக்கும் நல்ல தினம்.

**ரிஷபம்-** வயிற்றுக்கோளாறுக்கு இடமுண்டு. வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். உங்கள்பொறுமையைச் சோதிக்குமளவுக்கு காரியங்கள் நடைபெறும். அடக்கத்துடனும் உறுதியுடனும் செயலாற்றவும்.

**மிதுனம்-** சூழ்நிலைகள் இனிமை நிரம்பியதாக இருக்கின்றன. வீட்டில் பெரியவர்களுடன் நிலவிவந்த அபிப்பிராயபேதம் மறைவதற்கு இடமுண்டு. முன்பு தடைபோட்டவர்கள் திகைக்கும் வண்ணம் ராஜநடை போடுவீர்கள்.

**கடகம்-** எக்காரணத்தைக்கொண்டும் உள்ளக்கிடக்கையை இன்று வெளிப்படுத்த வேண்டாம். சிக்கலான பிரச்னைகளில் ஊமையாகி விடுவது விரும்பத்தக்கது. வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்க்கவும்.

**சிம்மம்-** எவ்வழி நல்வழி அவ்வழியில் நடைபோடுவீர்கள். உங்கள் நடவடிக்கைகள் மற்றவர்களின் ஆதரவைப் பெறும். பொதுத்தொண்டில் புதிய உற்சாகம் பிறக்கும். பத்திரிகைத் தொழிலிலுள்ளவர்களுக்கும் நன்று.

**கன்னி-** செயல்திறன் முதலிடத்தைத் தேடித்தரும். வாழ்க்கையில் அதிக நம்பிக்கை உருவாகும். பணவருவாய் பலப்படுவதற்கு இடமேற்படும். திடீர் செய்தி திகைக்கவைத்தாலும் திரவிய லாபத்தைக் கொடுக்கும்.

**துலாம்-** வீட்டில் கணவன் மனைவி உறவுமுறைகள் உற்சாகத்தை அளிக்கும். பாலியல் உணர்ச்சி அதிகரிக்கலாம். பெரிய இடத்திலிருந்து விருந்துபசாரத்துக்கு அழைப்பு வரலாம். வாழ்க்கை வளத்துடன் இருக்கும்.

**விருச்சிகம்-** கைவிட்டுப்போனபொருள் கைவந்துசேர முடியாது. கடமையாற்றும் இடத்தில் சக ஊழியர்களுடன் அபிப்பிராயபேதங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். சீறிவரும் கோபத்தை அடக்கவும்.

**தனுசு-** திட்டங்கள் தவிடுபொடியாவதன் மூலம் தடுமாற்றம் ஏற்படலாம். பதுங்கி நிற்கும் பகைவர்கள் பாய்வதற்கு முனையக்கூடும். ஆணவப் போக்கினால் அடிசறுக்க நேரிடலாம். அமைதிவழி நிற்கவும்.

**மகரம்-** வாழ்க்கையில் முத்தான நிகழ்ச்சியொன்று இடம்பெறும். பொது ஸ்தாபனமொன்றில் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றும் சந்தர்ப்பம் ஏற்படும். எதிர்பார்த்ததைவிட மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகும்.

**கும்பம்-** கவலைதரும் செய்தியைச் சுமந்து கடிதமொன்று வரலாம். சிலர் வாழ்க்கையில் அக்கினி ஆயுத பீடைக்கு இடமுண்டு எரிபொருள் சம்பந்தப்பட்டவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவும். மனத்திடம் வேண்டும்.

**மீனம்-** இனிமையான சம்பவங்கள் மேலும் வாழ்க்கையில் சுவை கூட்டும். சிலர் வாழ்க்கையில் வாகனச் சிறப்புக்கும் இடமுண்டு. பொறியியலாளர் புகழ் பெறுவர். வரவேற்கத்தக்க தினம்.


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெய்சங்கர்-எல். விஜயலட்சுமி
நடித்த
**வல்லவன் ஒருவன்**



## ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்


## நூலகத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், புதன்

புலோலியில் இளைஞர் நன்நெறிக்கழகம் அண்மையில் நூலகம் ஒன்றை ஊர் மக்கள் ஒத்[illegible]சயுடன் நிறுவியுள்ளது

இந்த நூலகத்தினை கழகப் பொருளாளர் திரு. ச. இளவரசு திறந்து[illegible] கையில் கழக[illegible] விப்பணியி[illegible] கைமேல்பலன்

# 'என்னைக் கைவிட்டுவேறொரு பெண்ணை மணந்துள்ளார்'

## ஜீவனாம்சவழக்கில் மனைவி சாட்சியம்

வல்வெட்டித்துறை, புதன்

''எனது கணவர் என்னைக் கைவிட்டு கரணவாய் என்னுமிடத்தில் இராசமலர் என்னும் பெண்ணை விவாகம் செய்துள்ளார். அன்று தொட்டு அவர் என்னைக்கவனிப்பதில்லை'' என வல்வெட்டித்துறை சமரபாகுவைச் சேர்ந்த நவரத்தினம் செல்லக்கண்டுஎன்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே.விக்னராசா முன்னிலையில் சாட்சிய மளிக்கையில் தெரிவித்தார்.

சமரபாகுவைச் சேர்ந்த செல்லக்கண்டு என்பவரால் தனது கணவனை நவரத்தினம் என்பவர் மீது ஜீவனாம்சம் கோரி இவ்வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

செல்லக்கண்டு தொடர்ந்து சாட்சியமளிக்கையில்'' நான் எதிரியை எட்டு வருடங்களுக்கு முன்னர் விவாகம் செய்தேன். அவர் சீவல் தொழிலும், மரம் வெட்டும் வேலையும் செய்து மாதம்ஒன்றுக்கு ரூபா 300 உழைப்பார். என்னைக்கவனியாது விட்டபடியால்என்சீவியத்திற்குமாதா மாதம் ரூபா100 தரும்படி கேட்கிறேன்'' என்றார்.

கா.சின்னத்துரை கிராம சேவகர் க. சுப்பிரமணியம் ஆகியோர் சாட்சிமளித்த பின் மேல் விசாரணை இம்மாதம் 6-ந்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# ''யாரடாவரச் சொன்னது?' என்று கேட்டு என்தலையில் அடித்தார்

வல்வெட்டித்துறை, புதன்

துப்பாக்கி வெடிச்சத்தமும், ஐயோ என்ற சத்தமும் கேட்டதும் அந்த இடத்திற்கு ஓடிப்போனேன். அந்த இடத்தில் இறந்த இரத்தினசிங்கமும் காயமடைந்த தேவராசாவும் நிலத்தில் விழுந்துகிடந்தனர். அந்தநேரத்தில் 4-வது எதிரி ''உன்னை யாரடா இங்கு வரச்சொன்னது?'' என்று கேட்டு எனது தலையில் கம்பியால் இருமுறை அடித்தார். நான் மயங்கி நிலத்தில் விழுந்துவிட்டேன். என்று கெருடாவிலைச் சேர்ந்த செல்லையா நாகலிங்கம் ஐயர் என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கு வல்வெட்டித்துறை ஊரிக்காட்டைச் சேர்ந்த வே. சிவச்செல்வச்சந்திரன், சி. இராசதுரை, க. பரமானந்தம், இ. தேவராசா, இ. துரைராசா, த. தர்மகுலசிங்கம், சி. நற்குணராசா, ந. சர்வானந்தம் ஆகியோர் கடந்த வருடம் ஐப்பசி மாதம் 12-ந்திகதி அதே இடத்தைச் சேர்ந்த சு. இரத்தினசிங்கத்தை துப்பாக்கியால் சுட்டும் வளால் வெட்டியும் கொலைசெய்ததாகவும், க. தேவராசாவை துப்பாக்கியால் சுட்டு படுகாயம் விளைவித்ததாகவும் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்டது.

நாகலிங்கம ஐயர் தொடர்ந்து சாட்சியமளிக்

மேல் விசாரணை இம்மாதம் 13-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

மாவிட்டபுரம், வியாழன்

கிளிநொச்சி உப பிரிவு நீர்ப்பாசன அலுவலகத்தில் தொழில் நுட்ப உதவியாளராகக்கடமையாற்றும் திரு. எம் பாலசுந்தரம் கந்தளாய் பகுதி நீர்ப்பாசன அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

விசுவமடு விவசாயப்படையினதும் நீர்ப்பாசனப்பகுதியினதும் தொழில் நுட்ப உதவியாளராகக் கடமையாற்றும் திரு எஸ். குகனேசன் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தும் இறுதி நேரத்தில் இவ் இடமாற்றம் பின்போடப்பட்டது.

0 0 0

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் லிகிதராகக் கடமையாற்றிவந்த திரு: எஸ். வேலுப்பிள்ளை இம் மாதம் முதலாந்திகதி தொடக்கம் திருக்கோணமலை காணிஅலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார். அவரது இடத்திற்கு திருகோணமலை பெரும் பகுதி பதிவு கந்தோரைச் சேர்ந்த திரு வீ நாகராசா இடமாற்றம் செய்யப்பட்டு[illegible]ார்.

## வயதில் பாகுபாடா?

# நெடுந்தீவு சேவையை

## அரசாங்க அதிபர் பொறுப்பேற்றார்

நெடுந்தீவு, வியாழன்

நெடுந்தீவிற்கும் குறிகாட்டுவானுக்குமிடையேயான பிரயாண, தபல் சேவையை இதுகாலவரைக்கும் இருந்து வந்த ஒப்பந்த வேலை முறையை கைவிட்டு இவ்வருடம் அரசாங்க அதிபரே பொறுப்பேற்று நடத்திவருகிறார். இச்சேவைக்கென தற்போது இரண்டு கொண்டக்ரர்கள் நியமிக்கப்பட்டு ஒருவர் நெடுந்தீவிலும் மற்றவர் குறிகாட்டுவானிலும் பிரயாண சீட்டுகள் விநியோகித்து வருகிறார்கள். இச்சேவையில் ஈடுபட்டுவரும் பொதுமராமத்து இலாகாவிற்குசொந்தமான மோட்டார் படகுகளான சில்வஸ்பிறேயும் ஏலாருவும் மூன்று சேவைகளையும் நடாத்திவருகின்றன.

துறைமுகங்களில் இருந்து பிரயாண சீட்டுகளை விநியோகிப்பதால் மோட்டார் படகுகள் குறிப்பிட்ட நேரத்துக்கு புறப்படுவது கடினமாகவும், சில சமயங்களில் பிரயாணிகள் கூட மோட்டார்வள்ளத்திற்கு பிந்திவிடுகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது மோட்டார் படகுகளிலேயே பிரயாணச்சீட்டுகள் முந்திய வருடங்களில் விநியோகித்தது போல் விநியோகிக்கப் படவேண்டுமென இங்கு பலரும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

# 'தபால் இலாகாசேவை மறக்கமுடியாதது'

மண்டைதீவு, புதன்

தபால் இலாகாவின் சேவை புனிதமானது, சமூக சேவை நிரம்பியது. பொது மக்களின் தொடர்புள்ளது. இச் சேவையின் காலம் மிகவும் இனிமையானதும், மறக்க முடியாததுமாகும்' ஒவ்வொரு மனிதனும் நேர்மையுடனும், கடமையுணர்ச்சியுடனும் நடந்தால் எவருக்கும் பயப்படவோ, அடிபணியவோ தேவையில்லை

இவ்வாறு வடமாகாண தபால் தந்தி அத்தியட்சகராக கடமையாற்றி இம் மாதம் 8ம் திகதியுடன் ஓய்வுபெறும் திரு. நா. தருமலிங்கம் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசார விருந்தில் பேசுகையில் குறிப்பிட்டார்

வடபகுதி தபால் தந்தி அத்தியட்சகர் அலுவலகத்தில் தபால் பகுதி மேற்பார்வையாளர் திரு. சிறினிவாசன் தலைமையில் இப் பிரவுபசாரம் நடைபெற்றது.

தி. சிறினிவாசன் பேசுகையில், திரு தருமலிங்கம் நாற்பதுவருடகாலம் தபால் இலாகாவில் நற்பணியாற்றி நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் என்றும், கடமை, கண்ணியம், தவறுமல் பணியாற்றியுள்ளார் என்றும், இவரது சேவையை தொடர்ந்து செய்ய நாம் பழகிக் கொள்ளவேண்டுமென்றும் குறிப்பிட்டார்

இப் பாராட்டு வைபவத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, மாவட்டங்களில் உள்ள, உப தபால் அதிபர்களும், தபால் அதிபர்களும், அத்தியட்சகர் அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

திரு. கந்தசாமி, திரு. லோகநாதன், திரு. நடராசா. திரு சின்னத்தம்பி, திரு. நாராயணசாமி, திரு ஹறிஎட்வேட் ஆகியோர் உரையாற்றினர்

# தமிழ்நாட்டுச் செய்திகள்

ஜனவரி, 7

### தீபிடிக்காத வீடுகள்

'சென்னை நகரில்ஒருகோடி ரூபா செலவில் தீபிடிக்காத வீடுகளைக்கட்ட தமிழகஅரசு தீர்மானித்திருப்பதாகவும் அறிஞர் அண்ணாவின் விருப்

நான்கே மாதத்தில் கட்டித் தர தாம் தயாராக விருப்பதாகவும். கோவையைச்சேர்ந்த ஜி. டி. நாயுடு தனக்கு நடைபெற்ற பாராட்டு கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார். இக்கூட்டத்தில் அவருக்கு அன்பளிப்பாக கிடைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...செய்திச்சுருக்கம், 5-05 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-10 மெல்லிசை, 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 செய்திச்சுருள், 8-00 செய்திச்சுருக்கம், 8 03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 புல்லாங்குழல், 10-30 செய்திச்சுருக்கம்.

## விளையாட்டரங்கு

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் புதிதாக நிறுவப்பட்ட பொழுது போக்கு அரங்கைத்திறந்து வைப்பதற்காக இம்மாதம் 21-ம்திகதி சீமெந்துகூட்டுத்தாபன அதிபர் திரு. என். எம். விஜயநாயகா காங்கேசன்துறைக்கு விஜயம்செய்ய இருக்கிறார்.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]

எம். ஜி. ஆர் - ஜெயலலிதா அசோகன் - சோ - சந்திரபாபு நடித்த

# அடிமைப்பெண்


5வது வெற்றி வாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி. பிரிபோயா, போயா 4 காட்சிகள்

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]

ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி

★ ஜெமினி ★ சாவித்திரி

★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா

★ நாகேஷ் ★ மனோரமா

நடித்த

# திருவருட்செல்வர்

[சுஸ்ட்மென் கலர்]



ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா சோ நடித்த

காவல் காரன்

வல்வெட்டித்துறை

றஞ்சனு தியேட்டர்

தினசரி: 6-30, 9-30

எம் ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த

ஆயிரத்தில்ஒருவன்

4-30க்கு மட்டும்

SPY IN THE GREEN HAT

ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 4-45, 7, 10-0

WAIT UNTIL DARK

மனோகரா

யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த

அடிமைப்பெண்

பல்கனி ஆசனங்கள் பதிவுசெய்ய விரும்புவோர் மனேச்சருடன் தொடர்புகொள்ளவும் தொலைபேசி இல: 485

REGAL JAFFNA

Daily 4-45, 7 &9-45, p.m

Poya, Pre-Poya 4 shows

Franco Nero, Elise Montes

IN

TEXAS ADDIOS

(adults only)


பொருளாளர் திரு. ச. இளவரசு திறந்துவைத்துப் பேசுகையில் கழகம் இதுவரை கல்விப்பணியில் கைமேல்பலன் கண்டிருக்கிறது என்றும், கல்வியின் மேல் வளர்ச்சிக்காக நூலகம் அவசியம் என்றும் கூறினார். இளைஞர்கள் நல்லமுறையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாது நூலகத்தைப்பயன் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த விழாவுக்கு திரு. க. புவனேஸ்வரன் தலைமை தாங்கினார். விழாவில் உரையாற்றிய கழகப் பொதுச் செயலாளர் திரு. ஆ. தேவராசன்பேசுகையில் தரமான வாசகர்கள் இல்லாதது இந்த நாட்டு இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருப்பதைச் சுட்டிக் காட்டி, தரமற்ற வெளி நாட்டு, இலக்கியங்களுக்கு வரவேற்பு அளிக்கப்படுவதைக் கண்டித்தார். ஈழத்து எழுத்தாளர்கள் வாழ ஈழத்து வாசகர்கள் முன்வர வேண்டும். இல்லையேல் இந் நாட்டில் தமிழ் வளர்ச்சி சிதையும் ... தமிழ் அழியும் என்று அவர் மேலும் கூறினார். இளைஞர் நன்னெறிக் கழகம் வள்ளுவத்தை மையமாக வைத்து அமைந்த ஓர் இளைஞர்சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடுவதாகவும் அவர் கூறினார்.

திரு மணிமாறன், திரு. தங்கராசா, திரு. வேலும் மயிலும் ஆகியோருட்பட பலர்பேசினர். தேநீர்விருந்தும்நடைபெற்றது.

## தற்கொலை

திருச்சி, ஜனவரி 7

திருச்சியில் மலைக் கோட்டை உச்சியிலிருந்து 12வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் குதித்து தற்கொலை செய்து கொண்டான். இச்சிறுவனைப்பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்டது.

நாகலிங்கம ஐயர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில், ''சம்பவநாள் சம்பவம் நடந்த நேரம் சமைத்துக்கொண்டிருந்தேன் அப்போதுதான் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்குப் போனேன், பொலிசாருக்கும் வாக்குமூலம் கொடுத்தேன்'' என்றார்.

எதிரிகளின்வழக்கறிஞரின் குறுக்குவிசாரணையின்போது கந்தையா குலேந்திரலிங்சம் சாட்சியமளிக்கையில், சம்பவநாள் நானும் இறந்த இரத்தினசிங்கமும், காயமடைந்த தேவராசாவும் அழகையா, தவராசா ஆகியோருமாக தோட்டத்திற்குப்போனோம். ஒற்றையடிப் பாதையால் போய் வண்டிப் பாதையில் இறந்தவர் போய் சேர்ந்ததும் வெடிச் சத்தம் கேட்டது. வெடி இறந்தவருக்குப் பட்டதும் இரத்தம் பீறிட்டது. உடனே நான் எனது சாரத்தைக்கழற்றி கட்டுவதற்கு விட்டுவிட்டு உள் அங்கியுடன் வீட்டுக்கு ஓடினேன். பெற்றோருக்கு நடந்ததைச் சொன்னேன்' என்றார்.

## கடை உடைத்து திருட்டு

அல்லைப்பிட்டி, புதன்

வேலணை தெற்குப் பகுதியிலுள்ள ஒரு தனிப்பட்ட கடையினுள் இரவினில் திருடர்கள் ஓட்டைப் பிரித்து உட்புகுந்து பல பொருட்களைத் திருடிச் சென்றுவிட்டதாக ஊர்காவற்றுறைப்பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து புலன்விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

இப்பகுதியில் திருடர்கள் அதிகரித்துவருவது குறிப்பிடத்தக்கது.

## வயதில் பாகுபாடா?

வெள்ளவத்தை, புதன்

12-12-69ம் திகதி அரசாங்க வர்த்தமானியில் மா. ம. சுங்கப் பகுதியினர் தமது சுங்கப் பகுதியில் இரண்டாந்தர சுங்க உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரியுள்ளனர். இதன் தமிழ் மொழிபெயர்ப்பில் 23 வயதுக்குட்பட்டவர்கள் தான் விண்ணப்பிக்கமுடியும்என்று இருக்கிறது. ஆனல் சிங்கள ஆங்கில மொழிபெயர்ப்புகளில் 24 வயதுக்குட்பட்டவர்கள் என்று காணப்படுகின்றது. இது தமிழ்ப்பரீட்சார்த்திகளில் பலரை விண்ணப்பிக்க முடியாமல் செய்துள்ளது இது அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது.

மேலும், எண்கணிதம், ஆங்கிலம், ஜி. சி. ஈ. (சாதாரண) தரத்தில் சித்தியடைந்து ஜி. சி. ஈ. (உயர்) தரத்திலும் 3 பாடங்களில்சித்தியடையவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது எண்கணிதம் மாத்திரம்என்றால் தூயகணிதம் (மற்ஸ்) சித்தியடைந்த பரீட்சார்த்திகள் என்னசெய்வார்கள்? எண்கணிதத்திலும்தரம் கூடியது தூயகணிதம் அல்லவா? அவ்வாறிருக்க வர்த்தமானியில் ஏன் தூயகணிதம் இடம் பெறவில்லை? என்று கோரி பல பரீட்சார்த்திகள்பிரதம சுங்க கலக்டருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர். இதன் பிரதியொன்று உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம்பியுமான திரு. மு, சிவசிதம்பரத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## வெங்காயம் பற்றிய மகாநாடு

மாவிட்டபுரம், புதன்

வெங்காய விடயம்பற்றி கொழும்பில் நடக்கும் உயர்தர மாநாடு ஒன்றில்கலந்துகொள்ள யாழ் மாவட்ட விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. என். ரி. சிவஞானம் கொழும்பு சென்றுள்ளார்.

உயர்தர அதிகாரிகள் கலந்துகொள்ளும் இம்மகாநாட்டில் திரு. என். ரி. சிவஞானம் வெங்காயத்தின் உத்தரவாத விலையை கூட்டும்படியும், யாழ் மாவட்டத்தில் சின்னவெங்காயம் பயிரிடப்படுவதைக் கவனித்து வெளிநாட்டில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யவேண்டும் என்றும் வற்புறுத்த இருக்கிறார்.

ரூபா செலவில் தீப்பிடிக்காத வீடுகளைக்கட்ட தமிழக அரசு தீர்மானித்திருப்பதாகவும் அறிஞர் அண்ணாவின் விருப்பத்தை பூர்த்திசெய்யவே தாம் இந்த தீர்மானத்துக்கு வந்திருப்பதாகவும், தமிழக முதல்வர் 252 தீப்பிடிக்காத வீடுகளைக் கொண்ட கருணாநிதி காலணியைத்திறந்து வைத்துப்பேசுகையில் கூறியிருக்கிறார்.

0 0 0

### மாணவர்களின் 'காதல் தெய்வம்'

கல்லூரி மாணவர்களே கதைவசனமெழுதி கல்லூரி மாணவர்களே நடித்து, அவர்களே டைரக் செய்யும் 'காதல் செய்வம்' என்னும் திரைப்படம் வெகுவிரைவி திரையிடப்பட விருப்பதாகக் கூறப்படுகிறது.

0 0 0

### இண்டிகேட்டில் பிளவு

பிரதமர் இந்திராவின் தலைமையில் இயங்கும் காங்கிரஸிலும் பிளவுஏற்பட்டிருப்பதாகபழைய டெல்லி மந்திரி திரு. குருபாதசாமி, தெரிவிக்கிறார்.

0 0 0

### ஜி. டி. நாயுடுவின் அதிசய வீடுகள்

திரு. நெடுஞ்செழியன் அடிக்கல் நாட்டியதுடன் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான ஒரு வீடு அன்று மாலையே 6.30 மணிக்கு மறைந்த முதலமைச்சர் அண்ணாவால் திறந்து வைக்கப்பட்டதென்றும், 4 லட்சம் ரூபா தந்தால் இது போன்ற வீடுகள் 4000த்தை

கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார். இக்கூட்டத்தில் அவருக்கு அன்பளிப்பாக கிடைத்த ரூ 76,000 மும் ஆந்திரா வெள்ள நிவாரண நிதிக்கு அரைவாசியும், கோவையில் நடத்தப்படும் மலிவுவிலையில் வீடுகட்டும் நிலையத்திற்கு அரைவாசியுமாக நன்கொடையாக வழங்கப்பட்டன.

### மதுரையில் மாநாடு

மதுரையில் தமிழ்நாடு ஆயுர்வேத வைத்திய சங்கத்தின் 26-வது மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு பல ஆலோசனைகள் கூறப்பட்டன.

0 0 0

### மயிலை குளத்தில் மங்கை சடலம்

மயிலாப்பூரிலுள்ள சித்திர குளத்தில் 21-வயது மங்கையின் சடலம் மிதக்கக்காணப்பட்டது. ஒருசில மணிநேரத்தில் இச்சடலம் பிரேத பரிசோதனைக்காக சென்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டது.

0 0 0

### சிறந்த தியேட்டர்

'ஒரு தியேட்டர், நவீன ஒலிசாதனங்கள், சிறந்த சுகாதார ஏற்பாடுகள், காற்றோட்டம், வெளிச்சம், அத்தனையும் உள்ளதாக இருந்தால்தான் சிறந்த தியேட்டராகக் கருதப்படும், என தமிழகமுதல்வர்சென்னையில் நடைபெற்ற சிறந்த தியேட்டர் பரிசளிப்பு விழாவில் கூறியிருக்கிறார்.


# யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ சரோஜாதேவி

★ நாகேஷ் ★ விஜயலலிதா ★ மனோரமா

மற்றும்பலர் நடித்த

# அஞ்சல்பெட்டி 520



'ராதா''

# சக்திபூஜா அகர்பத்தி

★ ஆலயங்கள்

★ திருமண வைபவங்கள்

★ இன்பநிகழ்ச்சிகளிலும்

உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்யும்

ராதா சக்தி பூஜா அகர்பத்திகளே!

ஏக விநியோகஸ்தர்கள்:

எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை சமாளிக்க

# அரபு நாடுகளின் உதவியை நாட லெபனன் அரசு ஏற்பாடு

## ஆட்சி மன்றத்தில் விரிவான விவாதம்

## பேரூட்டில் பிரிட்டிஷ் தலைவர்

பேய்ரூட், ஜன. 7

எல்லைப் பிரதேசத்தில் இஸ்ரேலியர் மேற்கொண்டு வரும் தாக்குதல்களை முறியடிப்பதற்கு அரபுத் தலைநகர்களிலிருந்து நிதிவசதிகளையும் வேறு உதவிகளையும் திரட்டுவதற்காக லெபனன் ஆட்சிமன்றம் உபகுழுவொன்றை தெரிவுசெய்திருக்கின்றது.

தென் லெபனன் எல்லைப் பிரதேசத்தில் இஸ்ரேலியர் தொடர்ந்து நடத்திவரும் தாக்குதல்கள் பற்றி லெபனன் ஆட்சிமன்றம் நேற்று விவாதித்தது.

தென். லெபனன் பாதுகாப்புக்கென ஆறுகோடி ஸ்டேர்லிங் செலவிடுவதற்கான ஒரு நகல் மசோதா லெபனன் ஆட்சிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

நேற்றையதினமும் லெபனன் எல்லையில் இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டன. லெபனனில் அரபுக்கொமாண்டோ நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாக டெல்-அவிவில் இஸ்ரேலியர் அறிவித்தனர்

தென் லெபனனில் அரபுக் கொமாண்டோக்கள்போர்ப் பயிற்சி நடத்துவதை நிறுத்தும்படி இஸ்ரேலியர் லெபனனைக் கோரிவருகின்றனர். இது சம்பந்தமாக அவர்களை நெருக்குவதற்காகவே அடிக்கடி எல்லைக் கிராமங்களில் தாக்குதல்களில் இறங்குவதாகக் கூறப்படுகின்றது

லெபனன் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு இஸ்ரேலியரின் தாக்குதல் பற்றி கடுமையான ஆட்சேபக்கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. சில தினங்களுக்குமுன் லெபனன் எல்லைக்கிராமங்களில் 8 இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகவும் 21 பேரை கடத்திக்கொண்டு போனதாகவும் லெபனன் பாதுகாப்புச் சபைக்குப் புகார் தெரிவித்திருக்கின்றது.

### 76 அரபு விமானங்கள்

1961-ல் ஆரம்பமான அரபு-இஸ்ரேல் சண்டைக்குப் பிறகு 76 அரபு விமானங்களை சுட்டு வீழ்த்தியிருப்பதாக இஸ்ரேலியர் அறிவித்துள்ளனர்.

நேற்று சூயஸ்கால்வாயின் குறுக்கே எகிப்திய நிலைகள் மீது இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல் நடத்தின. இந்தவிமானங்களில் ஒன்றை சுட்டு வீழ்த்தியதாகவும்

## லிபியாவுக்கு பிரான்ஸ் ஆயுத விற்பனை

### அமெரிக்கா கவலை

லிபியாவுக்கு பிரான்ஸ் ஆயுதங்கள் விற்பனைசெய்வது பற்றி ஆலோசனை செய்துவருவதாகத் தெரிகின்றது.

லிபியா வர்த்தகத் தூதுகுழுவொன்று ஏற்கனவே பாரிஸ் போயிருக்கின்றது. 1967-ம் ஆண்டு அரபு இஸ்ரேல் யுத்தத்தில் கலந்துகொண்ட நாடுகளுக்கு பிரான்ஸ் ஆயுதம் விற்பனை செய்வதில்லையென்று ஏற்கனவே செய்த முடிவின்படி லிபியாவுக்கு ஆயுதம் வழங்குவது தவருகாதென்றும், லிபியா அந்தச் சண்டையில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

லிபியாவுக்கு பிரான்ஸ் ஆயுதம் விற்பது பற்றி ஆலோசிப்பதாக வெளிவந்தவைகளைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

ஆனால் லிபியாவுக்குப் பிரான்ஸ் ஆயுதம் விற்பது பற்றி அமெரிக்கா கவலை கொண்டிருப்பதாக வெளிவந்த செய்திகளை அமெரிக்க அதிகாரி ஒருவர் மறுத்திருக்கிறார்.

### பெய்ரூட்டில் ஜோர்ஜ் பிரௌன்

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் துணைத்தலைவர் திரு. ஜோர்ஜ் பிரௌன் இப்பொழுது பேய்ரூட்டில் லெபனன் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்திவருகிறார். மேற்காசிய நிலைமை குறித்து நேரில் தெரிந்துகொள்வதற்காகஅவர் மேற்காசிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்

'கல்லக்குடி வெற்றிவிழா

## அண்ணா இருந்து பார்க்கவில்லையே'

## கருணாநிதி கவலை

சென்னை, ஜன 7

''நாடு முழுவதும் கல்லக்குடி வெற்றிவிழாவை நலம்பெறக் கொண்டாடி மகிழ்கின்ற நேரத்திலே இந்த வெற்றிச்செய்தியைக்கேட்டு முக்கியமாக மகிழவேண்டிய ஒருவர் இல்லையே யென்று என்மனம் மிகவும் வேதனைப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் சிதம்பரத்தில் நடைபெற்ற மகாநாட்டிலே 'சென்றுவா தம்பி கல்லக்குடி போராட்டத்தில் வென்றுவா தம்பி' என்று அவர் என்னை வழியனுப்பி வைத்த காட்சியை எண்ணியெண்ணி துன்புறுகிறது. இத்தகைய துன்பத்தால் தவிக்கும் இதயத்துடன் இந்த வெற்றியையும் அதன் காரணமாக நீங்கள் எனக்குச் சூட்டிய மாலைகளையும் வங்கக் கடலின் மடியில் துயில்கொள்ளும் அந்த மனிதருக்கு அறிஞர் அண்ணாவுக்கு அர்ப்பணித்து வணங்குகிறேன்.''

இவ்வாறு சென்னையில் நடைபெற்ற கல்லக்குடி வெற்றிவிழாவில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். விழாவில் அ[illegible]க்கு கல்லக்குடி போரா[illegible] உருவம் பதித்த வெற்றிச்சின்னம் வழங்கப்பட்டது. மலர்க்கிரீடமும் சூட்டப்பட்டது.

திரு. கருணாநிதி தொடர்ந்து பேசுகையில் இந்தப் போரா[illegible]த்தை தொட்டி அறிஞர் அண்ணா, சம்பத். நெடுஞ்செழியன் ஆகியோர் கைதுசெய்யப்பட தாம் தண்டவாளத்தில் படுக்க வேண்டுமென்பதற்காக 2 நாள் தலைமறைவாக இருந்ததாகவும், நம்முடைய இந்தக் கோரிக்கையைஇந்திரா அரசு ஏற்றுக் கொண்டதன் மூலம் இந்திரா ஆதரவாளர்களும் இவ்விழாவில் பங்குபற்றலாமென்றும் சின்டிக்கேட்டாரின் விருப்பப்படி பழங்காநத்தம் என்ற பெயரும் கல்லைக்குடியுடன் இணைக்கப் பட்டிருப்பதால் அவர்களும் ஒரு முதலாளியின் பெயர் மாற்றப்பட்டிருப்பதால் கம்யூனிஸ்டுகளும் இப்போராட்டத்தில் என்னை ஆறுமாதம் சிறைக்கனுப்பி இன்னும் பல அடக்குமுறைகளைக் கையாண்டு போராட்டம் பிரபலமாவதற்குக் காரணமாக இருந்தவர் ராஜாஜி ஆகையால் அவருடையசுதந்திரா ஆதரவாளர்களும்கூட இவ்விழாவில் பங்குபற்றலாமென்றும் கூறினார்.

இன்னும் மொழிசம்பந்தமாகவும் மாநில சுயாட்சி சம்பந்தமாகவும் பல போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கிறதென்றும் அவைகளில் கிடைக்கவிருக்கும் வெற்றிகளுக்கு இவ்வெற்றி முன்னோடியாக அமைந்திருக்கிறதென்றும் கருணாநிதி சொன்னார்.

எம் ஜி. ஆர். அமைச்சர் மதியழகன் மேயர் பாலசுந்தரம் ஆகியோரும் விழாவில்கலந்துஉரையாற்றினர்.

காஞ்சிபுரத்தில் கொண்டாடப்பட்ட வெற்றிவிழாவில் கல்வியமைச்சர்நெடுஞ்செழியன் உட்பட பல தி. மு. க. பிரமுகர் கலந்துகொண்டனர்.

## 'மனித சக்திக்கு அப்பாற்பட்டவர் இறைவன்'

யாழ்ப்பாணம், புதன்

''விஞ்ஞானப் புதுமைகள். சைவசித்தாந்த அடிப்படைச் சான்றுகள். அவனின்[illegible] ஓரணுவும் வையகத்தில் அசையமுடியாது. மனிதர்களின் சக்திகளைக் கடந்தே எம் தலைவன் இருக்கின்றார். அவரை நித்தம் ஏற்றிப் போற்றவேண்டியது எங்கள்[illegible] கொண்டாடுதல். அதற்கு இந்தியாவிலிருந்து சமய அறிஞர்கள் இருவரை வர[illegible]ழைத்தல். விழா நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய பணத்தை சைவப் பெருமக்களிடமிருந்து திரட்டுதல்.

சமய விழாக்கள் கொண்[illegible]டாடுதல். இலவசமான [illegible]முறையில் ஆலயங்களில் சம

## பாடகி சுசீலாவின் புகழுக்குக் காரணம்?

### எம். ஜி. ஆர். கூறுகிறார்

சென்னை, ஜன. 7

''சுசிலா கலை உள்ளம் கொண்டவர்; தன்னடக்க மிக்கவர். அதனால் தான் அவர் புகழ்மிக்கவராகத் திகழ்கிறார்.''

சென்னையில் ஜனாதிபதி பரிசு பெற்றசினிமாப்பாடகி சுசீலாவைப்பாராட்டி நடைபெற்ற கூட்டத்தில் எம்,ஜி. ஆர். பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இங்குள்ள ராஜேஸ்வரி கல்யாணமண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு முதலமைச்சர் கருணாநிதி தலைமை வகித்துப் பேசுகையில் ''தான் அரசியலிலிருந்தாலும் கடைசியில் வந்து சேர வேண்டிய குடும்பம் கலைக் குடும்பமேயாதலால் அக்குடும்பத்தைச்சேர்ந்த சுசீலா பெற்ற வெற்றி குவித்து தாம்மிக்க மகிழ்ச்சியடைவதாகவும் அவர் ஜனாதிபதியிடம் பெற்றபரிசு தமிழ்திரையுலகுக்கே கிடைத்த பரிசென்று கருதுவதாகவும் கூறினார்.

பல திரையுலகப் பிரமுகர்களும் கலந்து கொண்ட இவ்விழாவில் பாடகிசுசீலாவுக்கு பிரபல இந்திப்பாடகி லதா மங்கேஷ்கரினால் பொன்னாடை போர்த்தப்பட்டது. வெள்ளிவீணையும்,நெக்லஸ், சங்கிலி போன்ற பரிசுகளும் அவருக்கு வழங்கப்பட்டன.

கேரளமந்திரி மீது

## கொலை முயற்சி எப்படி நடந்தது?

திருவனந்தபுரம், ஜன 7

கேரள உள்துறை அமைச்சர் திரு. மகமதுகோயாவைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றி மேலும் சில விபரங்கள் கிடைத்துள்ளன. கொலை முயற்சி சம்பவம் பற்றிய விபரம் பின்வருமாறு:

முன்னாள் மந்திரி ஒருவரை தாக்கியதற்காக சிறைத்தண்டனை அனுபவித்தவரும், இடதுசாரிகம்யூனிஸ்ட்கட்சியின்தீவிர ஊழியருமான கங்காதர மாரார் சில குறைகளை தெரிவிக்க மந்திரியிடம் பேட்டியை வேண்டினார்.

அவருடைய வரலாற்றை அறிந்துள்ள அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் மந்திரியின் அறைக்கு அவரை அனுமதிக்க முதலில் மறுத்தனர். ஆனால் அந்த விஷயத்தை மந்திரியிடம் தெரிவித்தனர். மாராரை உள்ளே அனுப்புமாறு மந்திரி கூறினார். மாராரை தாங்கள் சோதித்துப் பார்க்கவேண்டும் என்று பொலிஸ் அதிகாரிகள் கூறினர். ஆனால் அது அவசியமில்லை என மந்திரி கருதியதாகக் கூறப்படுகிகிறது.

அறைக்குள் மாரார் அனுமதிக்கப்பட்டார். ஆனால் முன் எச்சரிக்கையாக அவருடன் ஒரு காவல்காரரையும் பொலிஸ் அதிகாரிகள் அனுப்பினர்.

மந்திரியை மாரார் அணுகியதும், ஒரு திராக புட்டியை எடுத்து அவர் மீது வீசினார் ஒரு நாட்டு வெடிகுண்டையும் வீசினார். உடனே மின்னல் வேகத்தில் காவல்காரர் மாரார் மீது பாய்ந்து கட்டிப்பிடித்தார். ஆனால் திராவக புட்டி வெடித்து, சிதறிய கண்ணாடி துண்டுகள் மந்திரி மீதுவிழுந்தன. ஆனால் காயம் சொற்பமே என கூறப்படுகிறது.

மாரார் கைது செய்யப்பட்டார்.

மாஜி இ. சோ. மந்திரி குரூப்பை தாக்கியதற்காக 2 ஆண்டுகளுக்கு முன்பு மாராருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. கவனர் விசுவநாதன் உள்ள கார் மீது கல் வீசியதாகவும் அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மாராரின் உடையில் மேலும் சில வெடி மருந்துகள் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

## செய்திச் சுருக்கம்

### வெளிநாடு செல்லத் தடை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aayanaham.org

என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

லிபியாவுக்கு பிரான்ஸ் ஆயுதம் விற்பது பற்றி ஆலோசிப்பதாக வெளிவந்த செய்திகள் பற்றி அமெரிக்கா பெரிதும் கவலைகொண்டிருப்பதாகக்கூறப்படுகின்றது நேற்று அமெரிக்காவிலுள்ள பிரெஞ்சு தூதுவர் வெள்ளை மாளிகைக்கு இரண்டுதடவைகள் அழைக்கப்பட்டார் பாரிஸிலுள்ள அமெரிக்கத் தூதரும் பிரெஞ்சு அதிகாரி

காஸிய நிலைமை குறித்து நேரில் தெரிந்து கொள்வதற்காக அவர் மேற்காஸிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறார். மேற்காஸிய நாடுகள் விட்டுக்கொடுக்க முன்வராத பட்சத்தில் இங்குள்ள பிரச்னைக்கு அரசியல் தீர்மானம் ஒன்று காண்பது சாத்தியமில்லையென்று அவர் கருத்துவெளியிட்டிருக்கிறார்.

குறுக்கே எகிப்திய நிலைகள் மீது இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல் நடத்தின. இந்தவிமானங்களில் ஒன்றை சுட்டு வீழ்த்தியதாகவும் மற்றைய விமானங்களைத் துரத்தியடித்ததாகவும் எகிப்தியர் அறிவித்தனர். ஆனால் தங்கள் விமானங்கள் யாவும் பத்திரமாகத் திரும்பிவந்துவிட்டதாக இஸ்ரேலியர் கூறினார்கள்.

# மொரார்ஜி - மஸானி இரகசிய சந்திப்பு விபரம் வெளியிட மறுப்பு

புதுடில்லி, ஜன. 7

சின்டிகேட் காங்கிரஸ் தலைவர் திரு மொரார்ஜி தேசாயும் சுதந்திரா கட்சித் தலைவர் திரு. மஸானியும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள் இந்தப்பேச்சுக்கள் பற்றி எதையும் வெளியிட இருதலைவர்களும் மறுத்துவிட்டார்கள்.

இந்திரா அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதுபற்றி இவர்கள் ஆலோசித்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

இந்திராகாந்தி அரசை கவிழ்ப்பதை தமது கடமை என்று கருதுவதாக மொரார்ஜி தேசாய் ஆமதாபாத்தில் கூறினார்

இதற்கு, கம்யூனிஸ்டுகள் உளபட எல்லா எதிர்க் கட்சிகளின் ஆதரவையும் தாம் வரவேற்பதாக அவர் கூறினார். ஆனால், கம்யூனிஸ்டுகளின் ஆதரவு நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும் என்று அவர் சொன்னார்.

ஜனநாயகத்தில் எதிர்க் கட்சிகளின் ஆதரவை பெற வேண்டியிருக்கலாம் என்று அவர் கூறினார். கொள்கைகளை இழக்காத நிலையில் ஆதரவு கிடைப்பதனால் அதை ஏற்றுக்கொள்ள ஏன் தயங்கவேண்டும் என்று அவர் கேட்டார். தேசாய் நிருபர்களிடையே பேசினார்,

ஜனசங்கத்தைப்பற்றியோ சுதந்திராவைப் பற்றியோ தாம் பயப்படவில்லை என்று தேசாய் கூறினார். ஜனசங்கம் தன்னுடைய கருத்துக்களை மாற்றிக்கொள்ள ஆரம்பித்து விட்டது. சுதந்திரக் கட்சித்தலைவர் மஸானியும் சோஷலிஸம் பற்றிப்பேச ஆரம்பித்துவிட்டார் என்று தேசாய் கூறினார்.

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் நாட்டில் சோஷலிஸத்தை ஏற்படுத்துவது அவசியம் என்று கூறிய தேசாய், ஆனால் அதை எவ்வளவு விரைவில் அடைவது என்பதில்தான் கருத்துவேற்றுமை என்று கூறினார்.

நாட்டில் கொள்கை அடிப்படையில் இரு கட்சிகள் இதன் மூலம் ஏற்படுமா என்று கேட்டபோது கொள்கை அடிப்படையில் கட்சிகள் பிரிவது சாத்தியமேயில்லை என்றார். இம்மாதிரி பேசுவதுஅர்த்தமற்றது என்றார், கட்சிகள் சீரமைப்பு ஏற்பட்டு மூன்று நான்கு கட்சிகள்தான் இருக்கும் என்றார்.

### சேரும் சாத்தியமில்லை

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், முன்பு இடைக்காலத்தேர்தல் நடக்கும் சாத்தியக்கூறு இருந்தது. ஆனால், பிப்ரவரி 16 லோகசபைக்கூட்டம் நடக்கவிருப்பதால் இப்போது அந்த சாத்தியக்கூறு இல்லை என்றார். ஆனால் இப்போது இடைக்காலத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற தருணம் என்று தாம் கருதுவதாகச் சொன்னார்.

இப்போது உள்ள சூழ்நிலையில் காங்கிரஸில் உள்ள இருகோஷ்டிகளும் ஒன்று சேரும் சாத்தியமே இல்லை என்றார்.

### பேசத்தயார்

இரு கோஷ்டிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்த மத்தியஸ்தம் செய்வதாக யூனியன் சுகாதார மந்திரி ஷா கூறியிருப்பது பற்றி கேட்டபோது, ''அங்கு அவரைப் பொருட்படுத்துபவர்கள் யார் இருக்கிறார்கள்?'' என்று தேசாய் கேட்டார். எனினும், இந்திரா காந்தியின் அங்கீகாரத்தை பெற்ற எவராவது அதற்கு முயன்றால் நான் அவருடன் பேச்சு நடத்தத் தயார் என்றார் தேசாய்.

காங்கிரஸ் பிரதி நிதிகளில் பெரும்பான்மையோர் பம்பாயில் நடந்த மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக புதியகாங்கிரஸ் கூறுவது பற்றிக் கேட்டபோது தேசாய்கூறியதாவது: அவர்கள் இப்போது என்ன வேண்டுமானாலும் சொல்லுவார்கள் . காரியக் கமிட்டிக்குப் போட்டியிட்டவர்களை ஏன் என்று பேசாமல் இருக்கும்படி செய்தனர். தேர்தல்தான் உண்மையை வெளிப்படுத்தியிருக்கும். போட்டியிட்டவர்களில் ஒருவர் தாம் போட்டியிலிருந்து வாபஸ் பெறவில்லை என்று கூறினார். ஆனால் தாம் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றதாகப் பொய்க் கையெழுத்திடப்பட்டிருப்பதாக முதலில்கூறிய புகாரை அவர் வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறார் அவரைத் திருப்திப்படுத்த ஏதாவது செய்யப்பட்டிருக்கலாம்.

## சோவியத் சிற்ப ஓவிய கண்காட்சி

யாழ்ப்பாணம், புதன்

சோவியத் சிற்ப ஓவிய திரைப்பட புத்தக கண்காட்சியை யாழ்ப்பாண பொதுசனநூல் நிலையத்தில் இன்றுகாலை 9மணிக்குயாழ்ப்பாண மேயர் திரு. எஸ். நாகராசா திறந்துவைப்பார்.

இக்காட்சி 9-ந் திகதிவரை நடைபெறும். திரைப்படம் நகரமண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும்.

பட்டது. மலர்க்கிரீடமும் சூட்டப்பட்டது.

திரு. கருணாநிதி தொடர்ந்து பேசுகையில் இந்தப் போரா[illegible]த்தை தொட்டி

சந்திரபயணி

## அலன்பீனுக்கு தண்டனை

நியூயோர்க், ஜன. 7

விண்வெளி சட்டவிதிகளை மீறியதாக மூன்று விண்வெளி வீரர்கள் 30 நாட்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சந்திரனில் இறங்கிய நான்காவது மனிதரான அலன்பீனும் ஒருவர். சிரற்றகாலநிலையின்போது விமானம் ஓட்டிச்சென்றதாக அலன்பீன் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

## பொது அறிவுப் பூங்கா வெளியீடு

வெள்ளவத்தை, புதன்

''இன்றைய இலங்கை மாணவர்களின் முக்கிய நோக்கமான அரசாங்கப் பொதுப்பரீட்சையில் தோற்றும் தன்மைக்கு மிகவும் உதவியாக பண்டிதர் வீரகத்தியின் 'பொதறிவுப் பூங்கா' என்ற நூல் அமைந்துள்ளது. மிகச் சமீப காலத்தில் நடைபெற்ற சம்பவங்களையும், வேறு முக்கிய விஷயங்களையும் உள்ளடக்கித் தரமானதோர் பொதறிவு நூலாக இது காணப்படுகின்றது. விஞ்ஞானம், கலை, இலக்கியப் பகுதிகளுக்கு முக்கியத்துவம்கொடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய நல் முயற்சிக்காகப் பண்டிதரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்''.

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற பண்டிதர் க.வீரகத்தியின் 'பொதறிவுப் பூங்கா' என்ற நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்த திரு.சபா. இராஜேந்திரன் கூறினார்.

'கொழும்பு ஐவர்வட்டம்' ஏற்பாடு செய்திருந்த இவ் விழாவில் திருவாளர்கள் நெல்லை க.பேரன், கருணை யோகன் வே. சு. மணியம் ஆகியோருட்படப் பலர் உரையாற்றினர். நூலின் முதற் பிரதியை திரு. எஸ். திரவியம் வாங்கினார்.

அசையமுடியாது. மனிதர்களின் சக்திகளைக் கடந்தே எம் தலைவன் இருக்கின்றார். அவரை நித்தம் ஏற்றிப் போற்றவேண்டியது எங்கள் கடனாகும். இதுவே எம்மைப் படைத்த இறைவனுக்கு நாம் செய்யும்நன்றிக் கடனாகும்'' என்று இந்து சமயபரிபாலனபிரசாரசபையின் தலைவர் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் சபையின் விசேட பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

சபைத் தலைவர் ஸ்ரீதஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் பேசுகையில், சைவசமயம் மிகவும் பின்னிலையடைந்து கொண்டு செல்கின்றது. அதனை வளர்க்கவேண்டியது அயராத ஊக்கமாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். ஆதீனத்தின் மூலம் சமயப் போட்டிகள், சமயப் பரீட்சைகள் நடாத்தி பரிசுகளும். தங்கப்பதக்கங்களும், சான்றிதழ்களும், தராதரப் பத்திரங்களும் வழங்கவேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் ஆகிய பயிற்சி வகுப்புகள் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நோன்மதி நாள், நோன்மதி முன்நாள் ஆகிய இரு நாட்களிலும், இலவசமாக 14-1-70 லிருந்து நடாத்துதல்.

பிரசங்கப் பயிற்சி வகுப்புகள், தேவார வகுப்புகள் ஆகியன நடாத்துதல்.

சபையின் இரண்டாவது ஆண்டுவிழா விமரிசையான முறையில் ஞானசம்பந்தர் குருபூசைத் தினத்துடன் இணைந்து மூன்று நாட்கள்

சைவப் பெருமக்களிடமிருந்து திரட்டுதல்.

சமய விழாக்கள் கொண்டாடுதல். இலவசமான முறையில் ஆலயங்களில் சமயப் பிரசங்கம் நிகழ்த்துதல், சமய விளக்கங்களில் உள்ள சந்தேகங்களை நீக்குதல் போன்ற பல முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## ''தேர்தல் அல்ல விடுதலை''

உடுப்பிட்டி, புதன்

''எமக்குத் தேர்தல் அல்ல முக்கியம்; விடுதலை இயக்கம் தான் முக்கியம், ஆகையால் தேர்தல் விவகாரங்களைக் கட்சிக் கிளைகள் கவனிக்க வேண்டும். எங்களில் சிலர் விடுதலைப் போராட்டத்திற்காகிய திட்டங்களை வகுக்க வேண்டும்.''

இவ்வாறு தமிழரசுக்கட்சிப் பிரமுகர் திரு. கே. ஜெயக்கொடி தமிழகம் செல்வதற்கு முன் தன்னைச் சந்தித்த உடுப்பிட்டித் தமிழரசுக்கிளைப் பிரமுகர்களிடம் தெரிவித்தார்.

## சேவைக்கு பாராட்டு

மாவிட்டபுரம், புதன்

மயிலிட்டிக் கிராமசபையில் பல வருடங்களாகப் பிரதம லிகிதராகக் கடமையாற்றி மாற்றம்பெற்றுச் செல்லும் திரு. என். பரமேஸ்வரனுக்கு ஒரு பிரிவுபசாரம் நேற்று அளிக்கப்பட்டது.

சபையின் புதிய தலைவர் திரு. கு. தி. இராசதுரை தலைமையில் நடைபெற்ற இவ்விழா, சபையின் உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இவரின் சேவையைப் பாராட்டி அங்கத்தவர்களும் உத்தியோகத்தர்களும் பாராட்டுரை வழங்கினர். தமக்களிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு திரு. என் பரமேஸ்வரன் நன்றி தெரிவித்தார்.

## காணி சுவீகரிப்பு

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சிக் காரியாதிகாரி பிரிவில் பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் அமைந்த தும்பளைக் கிராமத்திலுள்ள காணியொன்றை அரசாங்கம் பொதுத்தேவைக் கெனச் சுவீகரித்துள்ளது.

'சமுனித்திரி' எனஅழைக்கப்படும் துண்டுக் காணியையே அரசாங்கம் சுவீகரித்துள்ளது. காணி நீர்ப்பாச மின்சார பதில் அமைச்சர் திரு. சீ.பீ.ஜே. செனிவிரத்தின காணி கொள்ளும் சட்டத்தின்கீழ் பிரஸ்தாப காணியை அரசாங்கம் எடுத்துள்ளதாக அறிவித்துள்ளார்

## பூர்த்தி விழா

மாவிட்டபுரம், புதன்

மாவை முருகன் ஆலயத்தில் நடைபெறும் பெரிய புராண விரிவுரையின் பூர்த்தி விழா இம் மாதம் 19ம் திகதி மிகச் சிறப்பாக நடத்தப்பட விருக்கிறது.

கடந்த 7 மாதங்களாக நடைபெற்று வரும் இவ் விரிவுரையை நவாலியூர் சைவப் பிரகாசர் வை. நல்லையா நிகழ்த்தி வருகிறார்.

## சுருக்கம்

### வெளிநாடு செல்லத் தடை

கோட்டை, புதன்

அரசாங்க உத்தியோகத்தர்கள் இனிமேல் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் அனுமதியின்றி வெளிநாடு செல்வதை தடுக்கும் நடவடிக்கைகளை அமைச்சி மேற்கொள்ளவிருக்கிறது. கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் ராஜசூரியா லங்கா சோவியத் நட்புறவுச் சங்கத்தின் அழைப்பின் பேரில் ரஷ்யாவுக்குச் செல்வதை அடுத்தே நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது. இவர் ரஷ்யா செல்வதை இரு தடவை பிரதமர் தடை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

0 0 0

### ஆசிரியர்கள் பற்றாக்குறை

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருந்து வருகிறது. கல்வி வளர்ச்சியில் பின்தங்கிய இப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள இக் காலி இடங்களை நிரப்பி மாணவர்களின் கல்வி நலனுக்கு உதவுமாறு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்தை இப்பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

0 0 0

### சித்தாந்த வகுப்பு

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் மெய்கண்டார் கழகம்நடத்தும் சைவசித்தாந்த சாத்திரபாடவகுப்புக்கு குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் சிவஞான சித்தியார் நூல் நாள்தோறும் மாலை 6 மணிக்கு விரித்தியுரை செய்வார்.

0 0 0

### பின்போடப்பட்டது

மாவிட்டபுரம், வியாழன்

மயிலிட்டி கிராமசபை மின்சாரப்பகுதி அத்தியட்சகராகக் கடமையாற்றும் திரு. எஸ். மயில்வாகனம் பிள்ளையின் இடமாற்றமும் பதவிஉயர்வும் பின்போடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபைக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த இவரை ஆறுமாதகாலம் இங்கு கடமையாற்றும்படி ஸ்தலஸ்தாபன கமிஷன் பணித்துள்ளது.

வும் அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மாராரின் உடையில் மேலும் சில வெடி மருந்துகள் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

கொலை செய்ய முயற்சித்ததாக மாரார் மீது ஒரு வழக்கை தலைச்சேரி போலீஸார் பதிவுசெய்துள்ளனர்.

தலைச்சேரி விருந்தினர் மாளிகையில் தன்னைக் கொல்ல இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியின் முக்கிய ஊழியரான கங்காதர மாரார் முயற்சித்ததாக ஓர் அறிக்கையில் மந்திரிகோயா கூறினார்.

திராவக புட்டியையும், பந்துபோன்ற நாட்டு வெடிகுண்டையும் என் மீது அந்த ஊழியர் வீசினார். ஆனால் அல்லாவின் அருளால் தெய்வாதீனமாக நான் தப்பினேன், என்று அவர் கூறினார்.

சம்பவம் பற்றி ஆத்திரப்பட வேண்டாம் என்று பொது மக்களை குறிப்பாக முஸ்லிம் லீக் அங்கத்தினர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

## பள்ளத்தில் பஸ் பாய்ந்தது

அல்லைப்பிட்டி, புதன்

யாழ்ப்பாணத்திலிருந்து சுருவில்ஊடாக ஊர்காவற்றுறைக்குச் சென்று கொண்டிருந்த இ. போ. ச. பஸ் வண்டியொன்று வீதியை விட்டுவிலகிப் பள்ளத்தில் பாய்ந்தது. இங்கிருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த பஸ்ஸை விலத்தும்போது இச்சம்பவம் நிகழ்ந்தது. இவ்விபத்தில் தெய்வாதீனமாக ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை. வேலணை வங்களாவடியில் இவ்விபத்து நடைபெற்றது.

## காணிக்கச்சேரி

உடுப்பிட்டி, புதன்

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை காரியாதிகாரி பிரிவுகளிலுள்ள் முடிக்குரியகாணிகளுக்கான பட்டயங்களைப் பெறுவதற் குரியவர்களைத் தெரிவுசெய்வதற்கான காணிக் கச்சேரி எதிர்வரும் 17ந்திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்காணிக் கச்சேரியை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் தெல்லிப்பளை வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி கந்தோரில் நடாத்துவாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 79 பேர் இக்காணிக் கச்சேரிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாம் இறப்பும் பிறப்பும் வேண்டாமென பிரார்த்தனை செய்கிறோம். காரணம் உடலைக் கொண்டு அனுபவிக்கும் சுகங்கள் எல்லாம் நிலையற்றவை, உடலினின்று விடுபடுவதே விடுதலையும் ஆனந்தமும். அதுவரையில் ஹிம்சை என்கிற விஷபானத்தை தினசரி உட்கொண்டே தீர வேண்டும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 24-ந் திகதி (8-1-70)

## ஜனாதிபதி கிரியின் விஜயம்

இன்று நம் ஈழத்துக்கு வருகைதரும் பாரத நாட்டின் ஜனாதிபதியாகிய மாட்சிமை தங்கிய வி. வி. கிரி அவர்களுக்கும் அவரது உத்தமத் துணைவியாருக்கும் நாம் மகிழ்ச்சியுடன் நல்வரவு கூறுகின்றோம்.

நமது தேசாதிபதி அவர்களின் அழைப்பை அன்புடன் ஏற்று அவர்கள் இங்கு வந்திருக்கின்றார்கள். ஈழத்துக்கு அவர்கள் புதியவர்களல்லர். சமீபத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கிரி அவர்கள் வெற்றி பெற்றதும், 'நம்மவர் வென்றுவிட்டார்' என்று இலங்கையிலே பலர் பெருமகிழ்ச்சியுடன் கூறும் அளவுக்கு அவர்கள் இலங்கையினர் உள்ளத்தை ஏற்கனவே கவர்ந்திருக்கின்றார்.

நாட்டின் விடுதலைக்காகவும் எளிய தொழிலாளரின் உரிமைகளுக்காகவும் அஞ்சா நெஞ்சத்துடனே போராடி பல வெற்றிகள் பெற்ற கிரி அவர்கள் இந்தியாவின் புதிய ஜனாதிபதியானதும் நம் இலங்கைப் பொதுமக்களும் சிறப்பாகத் தொழிலாளி வர்க்கத்தினரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

அப்பெரும் வீரர் ஜனாதிபதியானபின் இந்தியாவுக்கு வெளியே முதல்முதலாக நம் நாட்டுக்கு வருகை தருவது நமக்குப் பெருமதிப்பும் கௌரவமும் அளிப்பதாகும்.


இலங்கை இந்தியா நல்லுறவு இனி பலப்பட்டு இரு நாடுகளுக்கும் நன்மை விளைய அவரது இந்த விஜயம் ஒரு நல்ல சுபசூசகமென்றே நம்புகின்றோம். இங்கு நாடற்ற இந்திய வம்சாவளியினரின் பிரச்னையை தீர்க்க இருநாட்டு அரசுகளும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை மனிதாபிமானத்துடன் நிறைவேற்றினால் தான் நல்லுறவுகள் இரு தேசங்களுக்கும் உண்மையில் பலப்பட முடியும் தொழிலாளர் வர்க்கத்தினரான இம்மக்களின் பிரச்னைகளை இந்திய ஜனாதிபதி கிரி அவர்கள் இங்கு ஹைகமிஷனராக இருந்த காலத்தில் நன்கு அறிந்திருக்கின்றார்கள் ஆகவே தாய்நாடு திரும்பும் இந்திய வம்சாவளியினர் நல்வாழ்வுவாழ அவரைத் தலைவராகக் கொண்ட இந்திய அரசு அனுதாபத்துடன் கூடுமானதைச் செய்யுமென்றே கொள்ளலாம். இதே சமயம் இலங்கை அரசாங்கமும் மேற்குறித்த ஒப்பந்தத்தை மனிதாபிமானத்துடன் சரிவர நிறைவேற்றவும் முன்வருமென்று எதிர் பார்ப்பது மிகையல்ல.

நம் இருநாடுகளும் பொதுவாக அடிமைப்பட்டிருக்கையில் இவ்விதமான விஷயங்களுக்கு இடமே இல்லை. இரு நாடுகளும் சுதந்திரமடைந்தால்தான் இப் புதிய உறவுகள் நம்மிடையே ஏற்படக் கூடியதாகவுள்ளது. அடிமையாட்சியால் நம்மிரு நாடுகளுக்கும் ஏற்பட்ட சிறுமைகளும் சிக்கல்களும் தீர்ந்து உலக அமைதியையும் மக்களின் சுபீட்சத்தையும் பலப்படுத்த இருதேசங்களும் தோளோடு தோள் நின்று தொண்டாற்றுமென்பதற்கு ஜனாதிபதி கிரி அவர்களின் இந்த விஜயம் புதிய நம்பிக்கையை அளிக்கின்றது.

ஜனாதிபதி கிரி தம்பதிகளும் இந்தியா—இலங்கை நட்புறவும் நீடூழி வாழ்க!.

### இன்று இலங்கைவரும்

# பாரத ஜனாதிபதி வி. வி. கிரி தொழிலாளர்களின் தோழன்



இன்று இலங்கை வரும் பாரத ஜனாதிபதி திரு. வி. வி. கிரி இந்தியாவின் முன்னைய ஜனாதிபதிகளிலும் பார்க்க இலங்கையோடு நெருங்கிய தொடர்புடையவர். இலங்கையின் முதல் இந்தியத் தூதராகப் பதவி வகித்த சிறந்த இராஜதந்திரியான இவரையே சாரும். இம்முதுபெரும் தலைவரும் தலை சிறந்த தொழிற்சங்கவாதியுமான இவரின் சிறப்பியல்புகள் இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளன.

இன்று இலங்கை வந்துள்ள பாரத ஜனாதிபதி திரு. வராககிரி வேங்கடகிரி 1947-ம்ஆண்டு தொடக்கம் 1959-ம் ஆண்டு வரை இலங்கையில் இந்தியத் தூதராகக் கடமையாற்றியவர். இங்கு தூதராகக் கடமையாற்றிய காலத்தில் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள மக்களோடும் குறிப்பாக அரசியல் தலைவர்களோடும் மிக நெருங்கிப் பழகி நட்புறவோடு கடமையாற்றியவர் திரு. கிரியாதலால் இலங்கைக்கோ இலங்கையர்க்கோ புதியவர் அல்ல. அவருக்கும் நம் நாடும் நாமும் புதியவர்களல்ல.

1894-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ந் திகதி இந்தியாவின் கிழக்குக் கரையோரத்திலுள்ள ஒரிஸ்ஸா மாநிலத்தின் கண்ணேயுள்ள பேரம்பூர் என்னுமிடத்தில் காந்தீய வாதியும் சிறந்த வழக்கறிஞருமான திரு. வி. ஜோகையா பந்தலுவுக்கு இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார். இவரோடு உடன் பிறந்தவர்கள் பதினொரு பேர். இவரைப்போன்றே அவர்களும் கல்வி கேள்வியிற் சிறந்தவர்கள்.

### அயர்லாந்தில்...

தனது பட்டப்படிப்பை கள்ளிக்கோட்டைக் கல்லூரியில் முடித்துக்கொண்ட திரு. கிரி மேலும் தனது படிப்பைத் தொடர்வதற்காக அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். அயர்லாந்தில் சட்டக்கல்வி கற்றுக் கொண்டிருக்கையில் அங்கு சுயாட்சிப் போராட்டம் நடைபெற்றது. ஐரிஷ் மக்களின் இப்புரட்சிப் போராட்டம் 17 வயது இளைஞரான கிரியை மிகவும் கவர்ந்ததோடு நில்லாது அவர் மனதிலும் புரட்சித் தீயை ஒளிவிடச் செய்தது. இதன் பயன் இவரும் ஐரிஷ் மக்களோடு சேர்ந்துகொண்டார். அரசியல் ஈடுபாடு பிரிட்டிஷ் ஆட்சியாளர் இவர் மேல் சந்தேகம் கொள்ளுமளவிற்கு வளர்ச்சியுற்றது. சந்தேகம்கொண்ட பிரிட்டி...

வாழ்க்கையின் பெரும் பகுதியை இந்திய தொழிற் சங்க வளர்ச்சிக்கே செலவழித்தார். 1927ல் ஜெனிவாவில் சர்வதேச தொழில் அமைப்பின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. இந்த மகாநாட்டுக்கு அகில இந்திய தொழிற்சங்கக் காங்கரஸின் சார்பில் கலந்து கொண்டார் கிரி. இதற்குப் பின்னர் உலகின் பல பல பகுதிகளில் நடைபெற்ற பல மகாநாடுகளிலும் தொழிலாளர் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு தொழிலாளர் நலனுக்காக வாதாடினர்.

### சட்டசபையில்...

இவ்வாறு நாட்டின் சிறந்த தொழிற்சங்கவாதியாக விளங்கிய கிரி தொழிலாளரிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தார்.

தார்கள், இவர் அங்கு கடமையாற்றிய காலத்தில் இலங்கைப் பிரதமராகவிருந்த டி, எஸ் சேனநாயகா கிரிமேல் மிகுந்த மரியாதையும் மதிப்பும் கொண்டிருந்தார்- இவரை மட்டுமன்றி இலங்கையின் தற்போதைய பிரதமர் மகாதேசாதிபதி சேர் ஜோன் கொத்தலாவலை காலஞ்சென்ற எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயகா முதலியோர் திரு கிரியின் நெருங்கிய நண்பர்கள், தொழிலாளர் சகாயனாகிய ஜனாதிபதி திரு. கிரி இங்கு கடமையாற்றும் காலத்திலும் பொது [illegible] ளோடு நெருங்கிப் பழகக் குறிப்பாக இந்தியத் தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சுமுகமான வழிவகைகளைத் தேடிக் கொடுத்தார். இங்குள்ள தொழிலா...

1954-ல் இராஜினாமாச் செய்தகிரி திரும்பவும் 1957-ம்ஆண்டு தொடக்கம் 1967-ம் ஆண்டுவரை பல மாநிலங்களின் கவர்னராகவும் கடமையாற்றியுள்ளார். 1957ல் இருந்து 60 வரை உத்தரப் பிரதேசத்தின் கவர்னராகவும் 1961-65 வரை கேரள ராஜ்ஜத்தின் கவர்னராகவும் 1965-67 வரை மைசூர்ராஜ்ஜயத்தின் கவர்னராகவும்கடமையாற்றியுள்ளார். மைசூர் மாநில கவர்னராக இருக்கும் காலத்தில் உப ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. அதற்குக் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. கிரி வெற்றி பெற்று உபஜனாதிபதியாகப் பதவியேற்றார். இதன் பின்னர் ஜனாதிபதியாகவிருந்த ஜாகீர் ஹுசேன் மரணமடைய அவரது இடத்துக்கு திரு. கிரி. 1969-ம் ஆண்டு மே மாதம் பதில் ஜனாதிபதியானர்.

இதன் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு காங்கிரஸ் மேலிடம் வேட்பாளராக இவரை நிறுத்துமென மக்கள் எதிர் பார்த்தனர். ஆனால் எதிர் பாராதவிதமாக மக்கள் நினைத்தது நடைபெறவில்லை சுயேட்சை வேட்பாளராக திரு. கிரியை மற்றும் பல கட்சிகள் நிறுத்தி இவருக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தன. இந்த ஜனாதிபதித் தேர்தலில்தான் காங்கிரஸ் பிளவுபட்டதென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

1969ம் ஆண்டு ஜூலை மாதம் 19ந் திகதி இந்தியாவின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கிரி, ஒரு காந்தீயவாதி என்பது யாவரும் அறிந்ததே. மிக எளிமையான வாழ்க்கையை அனுசரித்தொழுகும் ஜனாதிபதி கிரி, தனது பதவிகளுக்கேற்ற சம்பிரதாயங்களைக் கவனித்து அதன்படி ஒழுகாது சாதாரண மனிதன் போன்றே வீதிகளில் எல்லாம் நடந்துசென்றே நாட்டின் தேவைகளில் விசேஷ அக்கறை செலுத்தினர். தொழிலாளர்களும்தொழிற் சங்கமுமே இவரது உயிர் எனலாம். தனது வாழ்வின் பெரும் பகுதியை இவற்றிற்...

## ஜெயராஜ் எழுதுவது..

இன்று முதல் நான்கு நாட்களுக்கு இந்திய ஜனாதிபதி தம்பதிகள் நம் இலங்கையில் சுற்றுப்பிரயாணம்செய்கின்றார்கள். கொழும்பு, கண்டி இவ்விடங்களில் மட்டுமன்றி, நமது யாழ்ப்பாணத்திற்கும் அவர்கள் 11-ந் திகதியன்று வருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் சுமார் 6 மணி நேரமே தங்கியிருப்பாரென்றாலும், அவர்கள் நம்மை ஒதுக்கி அலட்சியப் படுத்தாமல், இங்கு வந்துவிட்டுச் செல்ல முடிவது, யாழ்ப்பாணத்திலுள்ள நமக்கு விசேஷ கௌரவமும் மகிழ்ச்சியுமளிப்பதாகும்.

இந்தியாவிலிருந்து பெருந்தலைவர்கள் வருவதாயின், முன்னர் கொழும்பு, கண்டியுடன் அவர்களது சுற்றுப் பயணம் முடிந்துவிடுவதுண்டு. இந்திய ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள், தலைநகரான கொழும்பிலே பிரதமர் முதலியவர்களிடம் விடைபெற்றுக் கொண்டபின், யாழ்ப்பாணத்திற்கும் வந்து கௌரவித்தார்கள். அந்த வழியைப் பின்பற்றி இப்போது ஜனாதிபதி கிரி அவர்களும் இங்கு வருகை தருகின்றார்கள். அவர்களுக்கும்,இதற்கு ஒழுங்கு செய்தவர்களுக்கும் நமது நன்றி உரித்தாகும்.

0 0 0

கிரி தம்பதிகள் இந்துக்கள். சுத்த சைவம். இலங்கையிலே அவர்கள் கதிர்காமத்துக்கும், திருக்கேதீச்சரத்திற்கும் சென்று வழிபட ஏற்பாடு செய்திருக்க வேண்டும் கண்டிக்குச் செல்லுகையில், புத்தர் பெருமானின் புனித தந்தத்தை அவர்கள் தரிசிக்க விசேஷ ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். நல்லதுதான்

இதேசமயம் இலங்கையிலே இந்துக்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் புனிதமானதென்று கருதப்படும் கதிர்காமத்திற்கு அவர்கள் சென்று தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யாதது பெரிய குறையே. ஒரு நாட்டுக்கோ, ஊருக்கோ செல்லும்போது முதலில் தரிசிக்கவேண்டியது, அங்குள்ள புனிதஸ்தலங்களே.

இந்நாட்டு மக்களில் பெரும்பாலோரும் புனிதமாக மதிக்கும் கதிர்காமத்திற்கு ஜனாதிபதி கிரி அவர்கள் சென்று தரிசனம் செய்வதால், அவர் இங்கு பொது...

என்றாலும் இங்கு இந்த விஜயத்துக்கான ஒழுங்குகள் செய்தவர்கள், ஆஸ்திகர்களான கிரி தம்பதிகளுக்குஇங்குகோவில் மரியாதைகளும், பிரசாதங்களும் கிடைக்கும்படி செய்வது. இந்த வரவேற்பைப் பெரிதும் சிறப்பிப்பதாக இருக்கும். செய்வார்களா?

ஃ ஃ ஃ

உற்றநோய் தீர்ப்பார் போலும் உறுதுணையாவர் போலும், செற்றவர் புறங்கண் மூன்றுந் தீயெழச் செறுவர் போலும், கற்றவர் பரவியேத்திக் கலந்தலந்துபாடும், அற்றவர்க்கன்பர் போலும் ஆவடுதுறையனாரே.

—அப்பர் அடிகள்

### 110 தொகுதிகளில் சுதந்திரக்கட்சி போட்டியிடும்

கோட்டை, புதன்

சுதந்திரக்கட்சி அடுத்த பொதுத்தேர்தலில் 110 தொகுதிகளில் போட்டியிடவிருக்கிறது.

சென்ற பொதுத்தேர்தலில் சுதந்திரக்கட்சி 100 தொகுதிகளிலேயே போட்டியிட்டது,

கடந்த பொதுத்தேர்தலில் 24 தொகுதிகளில் போட்டியிட்ட சமசமாஜக் கட்சி இந்தமுறை 19 தொகுதிகளிலேயே போட்டியிடுமெனத் தெரிகிறது

### பஸ்போக்குவரத்து ஆரம்பம்

விஸ்வமடு, புதன்

தற்போது விஸ்வமடுப்பகுதிக்கு பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரகாலமாக பஸ் போக்குவரத்து எதுவுமில்லாமல் விஸ்வமடுப்பகுதிமக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். இப்போது அக்கவலை நீங்கியுள்ளது.

### 10,000 ரூபா மருந்துவகை அன்பளிப்பு

கோட்டை, வியா

சமஷ்டி ஜேர்மன் குடியரசைசேர்ந்த ஒரு நிறுவனம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றே நம்புகின்றோம். இங்கு நாடற்ற இந்திய வம் சாவளியினரின் பிரச்னையை

ஜனாதிபதி கிரி தம்பதிகளும் இந்தியா — இலங்கை நட்புறவும் நீடுழி வாழ்க!.

---

ஆசிரியருக்குக் கடிதம்

# கிண்ணகப் பேச்சு

சமீபத்தில் உரும்பராய் திரு. மகாஉத்தமன் என்பார் பேசும்போது பலகை அமைத்து கிண்ணத்தை ஆங்கிலம் தெரியாத சிறுவர்களிடம் பிடிக்கச்செய்து பார்த்தபோது கிண்ணமே அசையவில்லையென்றும் ஆகவே அசைப்பவர்கள் மீடியமாக அமர்ந்தவர்கள் என்றும் ஆகவே இவை புரட்டு என்றும் எழுதியிருந்தார். அஃது சரியன்று.

பேசமுன்பு தம்மாட்டு அன்புமிக்கஆவியின் வருகை வேண்டும். ஆசாரசீலராகவும் பேசும் அறை முதலியன தூபதீபங்காட்டப்பட்டு சிவாலயத் தன்மை நிலவ வேண்டும். பார்க்கவேண்டுமே மீரிகமத்தில். அது கோயில்போல. 25-12-69ல் மீரிகமையில் எனது மகன் சு. குமாரமூர்த்தி(வயது12) யைச் செல்வி வித்தகத்தாரின் ஆசியுடன் மீடியத்தில் இருத்தி, கிண்ணத்தைப் பிடுக்கச் செய்தோம் அன்று ஸ்னானஞ் செய்த எம் மகனை மீண்டும் கால்முகம் கழுவச் செய்து அவருக்கு தூபம் காட்டிப் புனிதப்படுத்திய பின்பே மீடிய இடத்தில் என்மகனை செல்வி வித்தகமும் உயர்திரு க. மாணிக்க வாசகத்தாரும் அமரச் செய்தனர்.

குமாரமூர்த்தி தன்னுடைய பாட்டியாரை நினைந்து வரவுகூறி அசையாமல் கிண்ணத்தைப் பிடித்தார். 5 நிமிடம் வரை அசையவில்லை. மகன் குறும்புக்காரன். 'கடைசிவரை கிண்ணத்தை தானாக அசைப்பதில்லை. கூடியவரை அசையவிடுவதில்லை'' என்ற முடிவுடன்தான் அவர் கிண்ணத்தைப் பிடித்தான்.

ஐந்து நிமிஷம் போக கிண்ணம் மேல்பாகமாக அசைந்தது.''அசைக்கிறாயா என்றேன். இல்லவேஇல்லை'' என்றான். பின்பும் மீட்டும் கீழேக்கிஅசைந்தது. பின்பு நாலு பக்கமும் சென்றது. ஆனால் எழுத்துக்களில்முட்டவில்லை செல்வி வித்தகம் இவர் ஒரு சிறந்த மீடியமாக வரமுடியும் - 3 - 4 நாட்கள் பயிற்சிபெறவேண்டும் என்று கூறினார். எமக்கோ ஜோலிகள். நிற்க முடியவில்லை. வந்துவிட்டோம். பாட்டியாருடன் இவர் மீடியமாக அமைந்து நன்கு பேசிப்பார்க்க முடியும் என்றும் கூறினார் இவை என்கண்முன்பு நிகழ்ந்தவை.

கல்வயலில் ஆசிரியர் திரு. சி. கதிரவேலு அவர்களின் மகன் க. பாலசுப்பிரமணி என்பவரும் வீ. முருகதாஸ் என்பவரும் கடந்த ஆண்டு ஆவிகளுடன் பேசியதை அறிவேன்.

இவ்விருவரும் கொழும்புக்கு உத்தியோகம் கிடைத்துச் சென்றதும் பேச்சு கைவிடப்பட்டது. அவ்விருவரும் சிறந்த ஆசாரசீலர் மாமிசம் உண்பதில்லை.

ஆகவே விண்ணகப் பேச்சை முறைப்படி விஸ்தரித்து விருத்திபண்ண வேண்டும். ஆராயாமல் 'அது புரட்டு' என்று கூறப்படாது. சரியல்ல.

முத்தி நிலையில் இருப்பவர்களும் பிரார்த்தித்தால் உடன் வந்து பலகைமூலம் பேசுவர் நல்ல மீடியம் (புண்ணியவான், புண்ணியவதி) வந்து வாய்த்தால் நாம் பல காரியங்களைப் பேசமுடியும் ஆவி உலக சம்பாஷணை கடவுட்பக்தியைவளர்க்கும்; மறுமைப்பயன்பற்றிய எண்ணத்தை உண்டுபண்ணும்.

இ. த. சுப்பிரமணியம்
தலைமையாசிரியர்,
பரந்தன்.

---

## மரண அறிவித்தல்

இளைப்பாறிய வவனியாப் பகுதி காணி அலுவலக அதிபர் கிருஷ்ணபிள்ளை காலமானார். இவர் ராசம்மாவின் கணவரும், வைத்திலிங்கம், (இலங்கை வங்கி அனுராதபுரம்) சக்திலிங்கம், வரதராஜலிங்கம். தங்கரத்தினம் ஆகியோரின் தந்தையுமாவர். ஈமக்கிரியைகள் இன்று காலை 9 மணியளவில் தொல்புரத்தில் நடைபெறும்.

1635

---

ஆட்சியாளர் இவர் மேல் சந்தேகம் கொள்ளுமளவிற்கு வளர்ச்சியுற்றது. சந்தேகம்கொண்ட பிரிட்டிஷார் இவரை சும்மா விடவில்லை. அயர்லாந்திலிருந்து வெளியேற்றினர். அயர்லாந்திலிருந்து வெளியேற்றப்பட்ட கிரி தன்நாடு திரும்பியபோது அங்கு ஜவாலித்துக் கொண்டிருந்த சுதந்திர தீ இவரது சுதந்திர வேட்கைக்கு எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலாயிற்று.

### தொழிலாளர் நண்பனாக...

சுதந்திரதாகங் கொண்ட கிரி இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுககொடுக்க வேண்டுமாயின் காங்கிரஸ் நிறுவனம் மூலம் தான் பெற்றுக்கொடுக்கலாம் என கருதிக் காங்கிரஸில் சேர்ந்து நாட்டின் விடுதலைக்காக போராடினார். இவ்வாறு போராடுகையில் தொழிலாளிகளோடு நெருங்கிப் பழகி அவர்களது பிரச்னைகளைத் தீர்ப்பதிலும் அப்பிரச்னைகள் பற்றி ஆராய்வதிலும் அதிக கவனம் கொண்டார். தொழிலாளர் கஷ்டங்களைப் போக்க வேண்டுமானால் அவர்கள் குரல் ஒலிக்கத் தொழிலாளர்கள் உருவாகவேண்டும் என உணர்ந்த கிரி தொழிலாளர்களைத் தொழிற்சங்க இயக்கத்திலீடுபடுத்தித் தொழிற்சங்கத் தலைவராகவும் விளங்கினார். இளமையிலேயே தொழிற்சங்கவாதியான கிரி தனது இவ்வாறு நாட்டின் சிறந்த தொழிற்சங்கவாதியாக விளங்கிய கிரி தொழிலாளரிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தார். இச்செல்வாக்கு இவரை 1932-ம் ஆண்டில் சட்டசபைக்கு உறுப்பினராக அனுப்பியது. சென்னை சட்டசபை உறுப்பினராகிய கிரி கைத்தொழிலில் கூட்டுறவு அமைச்சராகக் கடமையாற்றினார். மறுபடியும் 1946ல் நடைபெற்ற தேர்தலிலும் வெற்றி பெற்று தொழில் அமைச்சராகக் கடமையாற்றி ஒரு வருட காலத்தில் அப்பதவியை ராஜினாமச் செய்தார்.

தனது பதவியை ராஜினாமச் செய்த கிரி சும்மா இருக்கவில்லை, மறுபடியும் தொழிலாளர்களோடு சேர்ந்து தானும் ஒரு பாட்டாளியாகி அவர்கள் நலனுக்காக தொழிற்சங்க இயக்கத்தை வளர்ப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இந்த வேளையில் அப்பொழுது இந்தியாவின் பிரதமராக விருந்த ஜவகர்லால் நேரு இந்தியாவின் முதல் இலங்கைத் தூதுவராக திரு கிரியை நியமித்தார். இங்கு கடமையாற்றிய காலத்தில் இலங்கையில் வாழும் இந்தியமக்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நியாயமானவழிவகைகளை மேற்கொண்டார். திரு கிரி தூதராகக் கடமையாற்றிய காலத்திலேதான் இலங்கைஇந்தியப் பிரதமர்கள் முதன்முதலாக மேற்படி பிரச்னைபற்றிப் பேச்சுவார்த்தை நடாத்த முதன்முதலில் கொழும்பில் சந்தித்து லாளர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சுமுகமான வழிவகைகளைத் தேடிக் கொடுத்தார். இங்குள்ள தொழிலாளர்களோடும் நெருங்கிப் பழகி அவர்கள் மதிப்பையும் சம்பாதித்துக்கொண்டார்.

### பதவிப் பற்றற்றவர்

இலங்கையில் தனது பதவிக்காலத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய கிரிக்கு பிரதமர் ஜவகர்லால் நேரு 1952ல் தொழில் அமைச்சர் பதவியை அளித்தார் இவ் வருடம் முதல் முதலாக நடைபெற்ற இந்தியப் பொதுத் தேர்தலில் பாக்கா நகரின் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டு லோகசபைக்கு மேற்படி பதவியை கிரி வகித்தார். தனது சேவைக் காலத்தில்தான் பதவிகளைத் தேடிப்போவதில்லை யென கிரி அடிக்கடிகூறிக்கொள்ளுவார். ஆனால்பதவிகள் அடிக்கடி அவரைத் தேடிப்போயிருப்பதை நாம் காணலாம். பதவிப் பற்றற்ற காரணத்தினால்தான் போலும் கிரி தனது கொள்கைக்கு முரண்பாடானகருத்துக்கள் இடம் பெறும் பொழுதெல்லாம் தனது அமைச்சர் பதவிகளைத் துறந்து விட்டு மறுபடியும் தொழிற்சங்க வாதியாகத் திகழ்ந்துள்ளார். இதே போன்றே 1954 லும் தொழிலாளர் சம்பளப் பிரச்னைசம்பந்தமான மந்திரி சபையின்தீர்மானத்தை எதிர்த்து நேரு அரசாங்கத்திலிருந்து இராஜினாமச் செய்தார்.

---

# பௌத்த மக்களுக்கு உதவ இறைவன் பெயரால் வேண்டுகிறேன்

## குரும்பசிட்டி அன்பரின் உதவி

நேற்றுக் காலையிலே 'ஈழநாடு' காரியாலய வாசலில் ஒரு பெரியவர் காரில் வந்துள்ளதாயும், வெள்ள நிவாரணத்துக்காக அன்பளிப்புக் கொடுக்க விரும்புவதாயும், மேலே படியேறி வரமுடியாமல் இருப்பதாயும் ஓர் அன்பர் வந்து தெரிவித்தார்.

நெற்றியிலே திருநீறு. வயோதிகப் பருவம். உடல் நலமும் சரியில்லை. ஆனால் அன்பு நிறைந்த உள்ளம். குரும்பசிட்டியைச் சேர்ந்த வர்த்தகர் பொ. வயித்திலிங்கம் அவர்கள், வெள்ளக் கஷ்ட நிவாரண நிதிக்கு ரூ. 100 அன்பளிப்பு அளித்து எழுதுவயதாவது:

நமது நாட்டின் தென்பகுதி, கிழக்கு மாகாணங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாகப் பெரும்சேதமடைந்து மக்கள் பலரும் உயிரிழந்து பலத்த இன்னல் உற்றனர்.

நாட்டின் எந்தப் பகுதியாயினும் தாக்கமடைந்து, மக்கள் கஷ்டமடையும் நேரத்தில் இன, மத, பேதமின்றி, கஷ்டப்பட்ட மக்களின் வாழ்க்கை சீர்பெற உதவி ஒத்துழைப்பு வழங்குதல் அவசியம்.

இந்நேரத்தில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கஷ்ட நிவாரணத்துக்காக நிதி சேகரித்து உதவ முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கது. இவ்வகை உதவி மூலம் தமிழ் மக்களின் நல்லெண்ணத்தை நமதுநாட்டின் ஏனைய இனத்தவருக்குக் காட்டுவதாக அமையும்.

சைவ சமயத்தவராகிய நாம், தில்லை நடேசப்பெருமான் கருணையால், பௌத்த மதத்தவராகிய தென்பகுதி மக்களுக்கு உதவுவது சிறந்தது.

இந்நிதிக்கு என்னால் இயன்ற சிறுதொகை (ரூ. 100) அன்பளிப்புச் செய்கிறேன். வசதியுள்ள ஏனையோர் இந்நிதிக்கு உதவவேண்டுமென இறைவனின் பெயரால் வேண்டுகிறேன்.''

திரு வைத்திலிங்கம் அவர்களுக்குப் பூண்டுலோயாவிலும் வர்த்தக சம்பந்தமுண்டு: அவர் பல ஆலயப் பொதுத் தொண்டுகளுக்கும் உதவி செய்துள்ளாதாகத் தெரிகிறது.

---

அக்கறை செலுத்தினார். தொழிலாளர்களும்தொழிற்சங்கமுமே இவரது உயிர் எனலாம். தனது வாழ்வின் பெரும் பகுதியை இவற்றிற்காகவே அர்ப்பணித்த சிறந்த இராஜதந்திரியும், முதுபெரும் அரசியல் தலைவருமான ஜனாதிபதி கிரியைப் பாட்டாளி மக்களின் கூட்டாளியென்றே அழைக்கலாம்.

### கலை கலாச்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டைவது வரவேற்கத் தக்கதுஎன்றார்.

மிருதங்க வித்துவான் ஏ.எஸ்.இராமநாதன் அருட்திரு என். சவரிமுத்து அடிகள் ஆகியவர்களும் பேசினார்கள். (மா. நிரு)

### மீண்டும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டன. திரு செல்வநாயகம் தனது காரை தானே ஒட்டிச் சென்றார். திரு. பொன்னம்பலம் தனது காரை அவரது சாரதி அப்புகாமியைக் கொண்டு ஒட்டச் செய்தார். அதன் பின்அவர் இந்த இயக்கங்களில் கலந்து கொள்ளாமல் விலகிக் கொண்டார். தமிழ் மக்கள் தொடர்ந்து சட்டமறுப்பு இயக்கம் நடத்தி பலர் சிறை சென்றார்கள். அன்று திரு. பொன்னம்பலம் போராட்ட இயக்கங்களில் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கி வந்திருந்தால் போராட்டம் பலம் வாய்ந்ததாக இருந்திருக்கும். தேர்லுக்குப் பின்னர் அன்று ஏற்பட்ட ஒற்மையை குலைத்து விட்டு இன்று தேர்தல் நேரத்தில் மீண்டும் ஒற்றுமைக்குரல் எழுப்புவதில் அர்த்தமில்லை.

தியாகம், நேர்மை, வீரம் ஆகியவற்றை கொண்ட தலைவரின் வழிசெல்லும்தமிழரசுக்கட்சியினால்தான் தமிழரின் உரிமைகளைப் பெற்றுத்தர முடியும். ஆதலால் வாலிபர்கள் எமது கட்சியில் சேர்ந்து தமிழினத்தின் உரிமைகளைப் பெறுவதற்கு எவ்வித தியாகங்களைச் செய்யவும் தயாராக இருக்க வேண்டும்.

திரு எஸ் இராசதுரை, கே இராசலிங்கம் ஆகியோரும் பேசினார்கள்

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

---

மாக மதிக்கும் கதிர்காமத்திற்கு ஜனாதிபதி கிரி அவர்கள் சென்று தரிசனம் செய்வதால், அவர் இங்கு பொது மக்கள் பலரது உள்ளத்தையும் கவரலாம். தெய்வத்தின் மூலமே ஒற்றுமையும் நல்லெண்ணமும் வளர முடியும். கதிர்காமத்தையே ஒதுக்கிய நிலையில் திருக்கேதீச்சரம் பற்றி எங்கே நினைக்கப்போகிறார்கள்!

0 0 0

என்றாலும் கதிர்காமத்திலும், திருக்கேதீச்சரத்திலும், இந்த முக்கிய விஜயத்தை முன்னிட்டு விசேஷ பூசைகள் செய்து, அந்த புனித பிரசாதங்களை கிரி தம்பதிகளுக்கு அளிக்கச் செய்யலாம்.

ஸ்ரீராஜேந்திர பிரசாத் அவர்கள் முன்னர் பலாலியில் வந்து இறங்கியபோது, மாவிட்டபுரம் கோவில் குருக்கள், அவருக்கு பூரண கும்பம் வைத்து ஆசி கூறி கோவில் பிரசாதங்களை வழங்கினார். கலைப்புலவர் நவரத்தினமவர்கள்கோவில் மரியாதைகளுடன், தமிழ் முறையிலேயே வரவேற்புக்கான ஏற்பாடுகள் எல்லாம் விமரிசையாகச் செய்திருந்தார்கள். அவர் இன்று இருந்திருந்தால், இதேபோல் ஒழுங்குகள் செய்திருப்பார். ஆனால் நமது துரதிருஷ்டம் அவர் இல்லையே!

---

### அன்பளிப்பு

கோட்டை, வியா

சமஷ்டி ஜேர்மன் குடியரசைசேர்ந்த ஒரு நிறுவனம் 10,000 ரூபா பெறுமதியான மருந்து வகைகளை இலங்கை அரசாங்கத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை தொற்று நோயினின்றும் காப்பாற்றுவதற்காக இம்மருந்து வகைகள் உபயோகப்படுத்தப் படும்.

---

தொழில்நுட்ப வளர்ச்சி

## அழிவுக்கான முன்னேற்றமாம்

லண்டன் ஜன, 7

கைத்தொழில் துறையிலும் தொழில்நுடபத்துறையிலும் உலகத்தில் ஏற்படடுவரும் முன்னேற்றம் மனித சமுதாயத்துக்கு ஒரு அழிவைத் தரக்கூடியதாகஅமைந்துள்ளதாக பாப்பரசர் போல் இன்று அச்சம் தெரிவித்தார், ரோமாபுரியில் நடைபெற்ற கூடட மொன்றில் அவர்பேசுகையில் இவ்விதம் சொன்னார்.

---


## சோவியத் கலை, கலாச்சார திரைப்பட விழா

சோவியத் தூதராலயத்தினதும் யாழ்ப்பாண மாநகரசபையினதும் ஆதரவின் கீழ் யாழ் நகர பொதுநூல்நிலையமண்டபத்தில் நடைபெற்றுவரும்

## சோவியத் கலை கலாச்சார விழா

10-ம் திகதிவரை நடைபெறும்
காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை திறந்திருக்கும்.

## திரைப்படவிழா

யாழ் நகரமண்டபத்தில் மாலை 6-30 மணிக்கு
8-1-70 'லெனின் கதைகள்'
9-1-70 'பறக்கும் தட்டுகள்'
10-1-70 '3 + 2' (விசால திரையில் நகைச்சுவை சித்திரம்)

1475


---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org